www.tamilarangam.net


# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (22.10. 1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (146) அன்பளிப்பு: 60 p


கடல் கடந்த சிறிலங்கா அரச பயங்கரவாதமானது, எமது போராட்டத்திற்கு ஆதரவு நல்கும் உலகத் தமிழ் சமூகத்திற்கு விடுக்கப் பட்ட ஒரு சவால். எதிரியின் இச்சவாலை துணிவுடன் எதிர்கொண்டு தாயக விடுதலைக்கு தொடர்ந்தும் உறுதியுடன் பணியாற்று மாறு உலகத் தமிழர்களை நான் வேண்டுகிறேன்.

- தமிழீழத் தேசியத் தலைவர்



லெப். கேணல் நாதன்

## மாவீரர் நாதன், கஜனின் முதலாம் ஆண்டு நினைவாக...

**நெஞ்சமெலாம் உம் நினைவுகள் நிறைக்குது**
**நிழல்களெல்லாம் உம் நிஜமெனத் தோன்றுது**

தாயில் கருவாகி...
தமிழில் உருவாகி...
தலைவன் வழி நின்ற...
தம்பியர் நீரல்லவோ!

ஈழத் திருநாட்டை...
எங்கள் வசமாக்க...
பாரில் தெருவெங்கும்...
பறந்து திரிந்தீர்களே!

நிதியின் பலமாகி...
நேர்மை வடிவாகி...
வளர்ந்த குரலொன்றை...
இழந்து தவிக்கின்றோம்!

எங்கள் நிலையதனை...
இந்த உலகறிய...
எழுந்த கரமொன்றை...
இழந்து விளிக்கின்றோம்!

நெஞ்சம் கனலாக...
கண்கள் குளமாக..
நின்று தவிக்கின்றோம்!

நாதன் எனும் நாமம்
நாளும் புவி வாழும்!
கஜனின் திரு நாமம்
தரணி தினம் கூறும்!

நினைவுக் கட்டுரைகள் உள்ளே....



கப்டன். கஜன்

### "ஜெயசிக்குறு" திணறுகிறது

# வன்னிக்களத்தில் புதிய திருப்பங்கள்

* 500க்கு மேற்பட்ட படையினர் பலி
* 34 இராணுவ வாகனங்கள் கைப்பற்றப்பட்டன

இம் மாதம் 5ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை கட்டங் கட்டமாக, 'ஜெயசிக்குறு' படை யணி மீது விடுதலைப் புலிகள் நடாத்திய வீரம் செறிந்த தாக்குதலினால் காடுகளுள் ஓடிஒளிந்து கொண்ட சிறில ங்காப் படைகளைத் தேடிய ழிக்கும் முயற்சியில் பெருவெற்றி பெற்ற விடுதலைப் புலிகள் ஐந்நூறுக்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்று ள்ளனர். பலியான ஐந்நூறு படையினரில் மூவர் சிறிலங்கா இராணுவத்தின் உயர்தர அதிகாரி கள் என்பதும் குறிப்பிட த்தக்கது. ஆயினும், இவர்களது பெயர் விபரங்கள் சிறிலங்கா அரசால் மூடி மறைக்கப்பட்டு வருகிறது.

கருப்புக் குத்தியிலும் விஞ்ஞா னன் குளத்திலும் தாக்குதலை ஆரம்பித்த விடுதலைப் புலிகள், மறுநாள் முடிவதற்கிடையில் சிங்களப் படையினரை பெரியமடு வரை ஓட விரட்டி அடித்தனர். பெரியமடு வரை சிங்களப் படையை பின்வாங்க வைத்த வெற்றிச் சண்டைகளில் பதின்மூன்று விடுதலைப் புலிகள் வீரச்சாவெய்தினர். இச் சண்டைக் களத்தில் 7ஆம்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## புல்மோட்டையில் பெரும் கடற்சமர்
### 'டோரா' ஒன்று மூழ்கடிப்பு! ஒன்று கடும் சேதம்

- 9 கடற்படையினர் பலி
- 2 கடற்கரும்புலிகள் உட்பட 5 கடற்புலிகள் வீரச்சாவு

பலநாட்கள் இடைவெளிக்குப் பின், கடந்த 18-10-97 அன்று தமிழீழக் கடற்பரப்பில் பெரும் கடற்சமர் ஒன்று இடம் பெற்றுள்ளது. இதில் சிங்களக் கடற்படையின் டோரா பீரங்கிப் படகு ஒன்று நீரில் மூழ்கடிக் கப்பட்டுள்ளது. மற்றுமொரு டோரா பீரங்கிப் படகு கடுமை யாகச் சேதமடைந்துள்ளது.

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டைக் கடற்பரப்பிலேயே இச்சமர் இடம்பெற்றுள்ளது. 18-10-97 இரவு ஒன்பது மணியளவில் தொடங்கிய கடற்சமர் மறுநாள் அதிகாலை ஐந்து மணிவரை நீடித்தது. ஆரம்பத்தில் கடற்புலிகளுக்கும் சிங்களக் கடற்படையினருக்கும் இடையில் உக்கிரமான துப்பா க்கிச் சமர் இடம்பெற்றது. தொடர்ந்து இச்சமர் நடந்து கொண்டிருக்கையில், கடற்படை யினர் கவனம் திசைதிருப் பப்பட்ட வேளையில், அதிகாலை 2.50 மணியளவில் வெடிமருந்து ஏற்றப்பட்ட படகுடன் புறப்பட்ட

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## தற்காலிக முகாம்கள் தகர்ப்பு! ஆயுதக் கிடங்குகள் அழிப்பு!
## நூறு மில்லியன் ரூபா ஆயுதம் புலிகள் வசம்

'ஜெயசிக்குறு' படையணி மீது, முல்லைச் சமருக்கு ஈடானது போன்ற வெற்றிகரத் தாக்குதல் ஒன்று நடாத்தப் பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் தலைமை யகம் செய்தி வெளியிட்டுள்ளது. சிங்களப் படையின் இப் பெரும் உயிரிழப்புகளும் இராணுவத் தளபாட இழப்புகளும் வன்னி க்களத்தில் பெரும் திருப்பத்தை விடுதலைப் புலிகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் எனவும் விடுதலைப் புலிகளின் தலை மையகக் குறிப்பு எதிர்வு கூறியுள்ளது. இம்மாதம் 5ஆம் திகதி கருப்புக்குத்தி, விஞ்ஞா னன்குளம் ஆகிய இரு

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## 'ஜெயசிக்குறு'வை தாங்கிப் பிடிக்க கிழக்கிலுள்ள சிங்களப் படைக்கு அழைப்பு

'ஜெயசிக்குறு' நடவடிக்கை, சந்திரிகா – ரத்வத்த குடும்ப த்தின் அரசியல் அஸ்தமனமாக போய்முடிந்து விடக்கூடாது என்பதில் சந்திரிகா பெரும் அக்கறை காட்டி வருவதாகத் தெரிகிறது. இதனால்,

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழர்கள் மேல் பகிரங்க இனக்கொலைகள் சர்வதேச உலகே இன்னுமேன் அமைதி! சாவது தமிழர்கள் என்பதால் இந்தப் பாகுபாடா!!

சர்வதேச உலகம் வெட்கித் தலை குனியும் அளவுக்குச் சர்வதேசச் சட்டங்கள் சிறிலங்கா அரசால் பகிரங்கமாக எவ்வித அச்சமுமின்றி மீறப்பட்டு வருகிறது. இனக்கொலை எல்லாவழிகளிலும் சர்வதேசச் சட்டங்களால் தடுக்கப்பட்டுள்ள போதிலும், அத்தனை வழிகளாலும் பகிரங்கமான முறையில் சிறிலங்கா அரசால் இனக்கொலை, தமிழர்கள் மேல் தாராளமாக நடாத்தப்பட்டு வருகிறது.

தங்கநாயகி எனும் 49 வயதான தமிழ்த் தாய் அம்பாறையில் அவருடைய மகன் முன்னிலையிலேயே சிங்களப் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். அத்துடன், அவரின் பெண் உறுப்பு கூரிய ஆயுதத்தால் குத்திக் கிழிக்கப்பட்ட மனித அநாகரீகமும் நடாத்தப்பட்டுள்ளது.

இதற்குமுதலும் அம்பாறையில் கோணேஸ்வரி என்ற தமிழ் குடும்பப் பெண், சிங்களப் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதோடு, கிரனைற்றினால் அவரின் பெண் உறுப்பும் சிதைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டது அறிந்ததே. அதேபோல் யாழ். குடாநாட்டில் ஒரு தமிழ்த் தாயின் சடலம், மார்பகம் அறுக்கப்பட்டு பெண் உறுப்பு கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பெண்களைக் கொன்றும், பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கியும் வரும் சிங்களப் படைகள், தமிழர்கள் மேல் விமானக் குண்டு வீச்சுக்களையும் தாராளமாக நடாத்துகின்றன.

### விமானத் தாக்குதலில் ஏழுபேர் பலி

ஒட்டிசுட்டான் பகுதியில் நடாத்தப்பட்ட குண்டுவீச்சில் ஆறு பெண்கள் உட்பட ஏழு பேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர். இச்சம்பவம் இம் மாதம் 13ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. இதற்கிடையில் இம் மாதம் ஆறாம் திகதி மாங்குளம், கனகராயன்குளம் பகுதிகளில் மக்கள் வாழ்விடங்கள் மீது கடுமையான குண்டுவீச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. இச் சம்பவத்தின்போது பொதுமக்கள் பயணம் செய்து கொண்டிருந்த வாகனம் மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலினால் ஒரு தமிழ் மகன் பரிதாபகரமாகக் பலியாகியுள்ளார். மூவர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காலை ஏழு மணி முதல் மதியம் இரண்டு மணிவரை இந்த விமானத் தாக்குதல் நீடித்ததாகத் தெரிகிறது.

அருள் மரியாம்பிள்ளை (62), செல்லையா பரமலிங்கம் (32), நாகராசா யோகேஸ்வரன் (32) ஆகியோரே காயமடைந்தவர்கள். இறந்தவர் இன்னமும் அடையாளம் காணப்பட வில்லை.

### பொதுமகன் வெட்டிக் கொலை

சாவகச்சேரியில் கந்தையா சுப்பிரமணியன் எனும் தமிழ்ப் பொதுமகனின் உடல் கத்தி வெட்டுக் காயங்களுடன் தெருக்கரையில் வீசப்பட்டிருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்புப் பகுதிகளில் தமிழர் கத்திவெட்டுக் காயங்களுடன் தெருக்களில் சடலங்களாகக் காணப்படுவது தொடர் கதைகளாகிச் செல்கின்றன.

### சூடுகளும் கொலைகளும்

சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கண்டாவளை மடுக்கரையில் 27 வயதான தனபாலசிங்கம் விநாயமூர்த்தி எனும் தமிழ் இளைஞர் இம் மாதம் முதலாம் திகதி தனது கால்நடைகளை தேடிச் சென்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தால் கடத்தப்பட்டுள்ளார். கிளிநொச்சியில் மட்டும் 90க்கு மேற்பட்ட தமிழர்கள் கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளதாகப் புள்ளிவிபரச் சேகரிப்புக்கள் தெரிவிக்கின்றன.

### மற்றொரு கிறிஸ்தவ துறவி திருமலையில் சுடப்பட்டார்

கிளிநொச்சியில் தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த பிதா அருட்பாலன், சிறிலங்கா இராணுவத்தால் வெட்டிக் கொல்லப்பட்ட அதிர்ச்சிச் செய்தி ஓய்வதற்கிடையில், திருமலையில் மற்றொரு கிறிஸ்தவ துறவி சிங்களப் படைகளினால் சுடப்பட்டு படுகாயப்பட்டுள்ளார். அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்த டொனால்ட் எனும் அருட்சகோதரர் ஒருவரே அன்புவழிபுரம் எனும் இடத்தில் சிங்களப் படையால் சுடப்பட்டுள்ளார்.

### கர்ப்பிணித் தாயின் மார்பூடாக துப்பாக்கிச் சூடு

கல்மடு அகதிமுகாம் மீது சிங்களப் படையினர் நடாத்திய இனவெறித்தனமான துப்பாக்கி பிரயோகத்தில் சுபத்திரா எனும் கர்ப்பிணித் தாயின் மார்பினூடாக இரு ரவைகள் துளைத்துச் சென்றுள்ளன. படுகாயமுற்று மயக்கநிலையில் இருந்த இவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் தம்பிராஜா என்பவரும் கடுங்காயமடைந்துள்ளார். கல்மடு அகதி முகாம் மீது இரண்டாவது முறையாகச் சிங்களப் படையினர் நடாத்திய இவ் வெறிச் செயலானது, அங்குள்ள தமிழ் மக்களை வெளியேற்றுவதில் சிங்களப் படையினர் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதையே தெளிவுபடுத்தி யுள்ளது.

இவ்வாறு, தமிழ் பொதுமக்கள் மீது பகிரங்க இனக்கொலைகள் நடாத்தப்பட்டு வரும் இவ்வேளையிலும் சர்வதேச சமூகம் அமைதியாக இருப்பது, தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. இது, தமிழர்கள் தானே பாதிக்கப்படுகிறார்கள் என்ற பாகுபாட்டு உணர்வா என்றே கேட்கத் தோன்றுகின்றது. புலம்பெயர் வாழ் தமிழர்கள் தமது நாடுகளிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் மத்தியில், தமிழீழ மக்களுக்கு சிறிலங்கா புரிந்துவரும் கொடுமைகளைத் தொடர்ந்தும் எடுத்தியம்பி வருவதுடன் சர்வதேச சமூகத்திடம் நியாயம் கேட்பதும் இன்றியமையாதது.

---

# களநிலை மாறுமா?

அமெரிக்காவின் விடுதலைப் புலிகளுக்கு எதிரான அறிவிப்பு, இலங்கையின் அரசியலில் ஏற்படுத்தக் கூடிய பாதிப்புக்கள் என்னவென்பது குறித்து பல தரப்பிலும் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றது. சிறிலங்கா அரசாங்கம் இது தனது வெளிநாட்டுக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியெனப் பெருமைப்பட்டுக் கூறிக்கொள்கின்றது. ஆனால், இது விடுதலைப் புலிகளுடனான போரை எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதே உண்மையில் இது குறித்த அளவீடாக இருக்கும். பொதுவாகவே அமெரிக்காவின் அறிவிப்பானது, அமெரிக்காவில் இருந்து பணம் மற்றும் ஆயுத தளபாடங்களைப் புலிகள் பெற்றுக் கொள்வதைத் தடைசெய்யும் என்று சிறிலங்கா அரச தரப்பு தெரிவிக்கின்றது. ஆனால், இதுவரையில் அமெரிக்காவில் இருந்து புலிகள் பெருமளவு நிதியைப் பெற்றுக் கொள்வதாகவோ அன்றி அமெரிக்காவில் இருந்து ஆயுத, தளபாடங்களைப் பெற்றுக்கொள்வதாகவோ தகவல்கள் எதுவும் இல்லை. இந்த நிலையில் அமெரிக்காவின் அறிவிப்பால் ஏற்படக் கூடிய விளைவுகள் அரசாங்கம் கூறிக்கொள்வது போன்று, உச்சமாய் இருக்கும் என எதிர்பார்ப்பது தவறானதாகும். அதாவது, அமெரிக்காவின் அறிவிப்பின் விளைவுகளை எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்காவின் கூற்றுக்களின் அடிப்படையில் நோக்குதல் பொருத்தப்பாடானதாக இருக்கும். "புலிகள் ஏனைய இயக்கங்களைவிட மாறுபட்டவர்கள். ஆகையினால் யுத்தத்திற்கான காரணிகளைப் பார்க்கும் போது அவர்களின் பின்னணியை நாம் பார்க்க வேண்டும். அமெரிக்கா பயங்கரவாதம் எனக் கூறியதால் சிறிலங்கா அரசுக்குக் கிடைக்கக்கூடிய ஆதாயம் மட்டுமல்ல, வடக்குக் கிழக்கில் கிடைக்கக் கூடிய பெறுபேறுகள் எவை என்பதையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்" என்ற ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றுக்கள், கடந்த கால அனுபவத்தையும் போர்க்காலச் சூழலையும் ஓரளவு அறிந்து கொண்டிருப்பதன் விளைவு ஆகும். ர்ணில் விக்கிரமசிங்க கூறுவது போன்று, விடுதலைப் புலிகள் ஏனைய இயக்கங்களில் இருந்து மாறுபட்டவர்கள் என்பதும் ஏற்கனவே நிரூபணமாகிவிட்ட ஒன்றாகும். மக்களின் உரிமைகளை அரசியல் பேரத்திற்கு உள்ளாக்குதல், அற்ப சலுகைகளுக்காகத் தமது நிலைப்பாட்டினைக் கைவிடுதல், புலிகளைப் பொறுத்து சாத்தியமற்றது. அத்தோடு, தமது கொள்கைக்காக அவர்கள் உயர்ந்தபட்ச அர்ப்பணிப்பாக உயரையே தியாகம் செய்வதற்குத் தயாராக உள்ளார்கள் என்பதுமாகும். அத்தோடு, விடுதலைப் புலிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தமையும் அதை வழிநடாத்திச் செல்கின்றமையும் ஏனையவர்களின் உதவிகள் கிடைக்கப்பெற்றோ அன்றி கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அல்ல. ஆற்றல், திறமை, தன்னம்பிக்கை என்பனவற்றின் அடிப்படையிலேயே ஆகும். இதனை அவர்கள் கடந்த காலத்தில் நிரூபித்தும் உள்ளனர். இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க எழுப்பியுள்ள கேள்வியானது, அர்த்தமுள்ளதாகின்றது. அதாவது, அமெரிக்காவின் அறிவிப்பால் வடக்கு கிழக்கில் கிடைக்கக் கூடிய பெறுபேறுகள் எவை என்பதாகும். ஏனெனில், அந்நியக் கட்சி எதிலும் சார்ந்திராது தமது விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப் புலிகளை, வெளிச்சக்திகளின் எதிரான நிலைப்பாடுகள் எந்தளவு தூரம் பாதிக்கும் என்பதாகும். இக்கேள்விக்குச் சரியான பதிலானது, அமெரிக்கா எந்தளவுக்கு இலங்கை விவகாரங்களில் நேரடித் தொடர்பைப் பங்காளியாக மாற்றப் போகிறது என்பதைப் பொறுத்ததேயாகும். ஆனால், அமெரிக்காவோ இதுவரையில் சிறிலங்கா அரசிற்கு இராணுவத் தளபாட உதவிகளை வழங்கவில்லை எனக் கூறுகின்றது. ஆயினும், சில உதவிகளை மறைமுகமாக வழங்கியே வருகின்றது. ஆனால், அமெரிக்கா சிறிலங்காவுக்கான உதவியை அளித்தால் என்ன அளிக்காது விட்டாலென்ன வெளிநாட்டு அரசுகள் தமது நலன் கருதி விடுதலைப் புலிகளை என்ன பெயர் கொண்டு அழைத்தாலும் கூட, தமிழர் தேசிய இன விடுதலைக்கு விடுதலைப் புலிகள் இயக்கமே தலைமை தாங்குகின்றது என்பது யதார்த்தமாகும். ஆகையினால், ஆயுத பலங்கொண்டு விடுதலைப் புலிகளை அழித்து விடலாம் என்று எவரும் எண்ணுவது தவறானதாகும். ஏனெனில், விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தேசிய இனத்தின் போராட்ட அமைப்பாகும்.

- நன்றி ஈழநாதம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எங்களை வாழவிடுங்கள்

"ஆயுத நெருக்குதலுடனான சிங்கள இறைமையிலிருந்து விடுபட்டு, எங்கள் வரலாற்றுத் தாயகத்தை மீள நிறுவி நாங்கள் அமைதியாக வாழ விரும்புகிறோம். எங்களை எங்கள் சொந்த மண்ணில் வாழவிடுங்கள்" என்பதே தமிழீழத் தேச மக்களின் வேண்டுகோள்.

இதனை அழிப்பதற்கான தனது இராணுவ நடவடிக்கைகளுக்கு சந்திரிகா வைத்த நியாயப்படுத்தும் சுலோகம் "சமாதானத்திற்கான போர்" எனும் கோசம். இக் கோசத்துடன் தமிழீழத் தேசத்தின் பொருண்மிய மையம் எனக் கருதப்பட்ட யாழ். நகரையும் அதன் உட்கட்டுமானங்களையும் உருக்குலைக்கும் ஆக்கிரமிப்புப் போரை சந்திரிகா தொடர்ந்து நடாத்தி வருகின்றார்.

7-7-95 திகதி முதல் ஐந்து தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகள் மூலம் யாழ். குடாநாட்டு மக்களை அவர்களது இல்லங்களில் இருந்தும் வாழ்வைச் சீர்குலைத்தும் சொந்த நாட்டிலேயே அவர்களை ஆதரவற்றவர்களாக்கிய சந்திரிகா, ஈற்றில் யாழ்ப்பாணத்தின் உட்கட்டுமானங்களையும் தமிழ் மக்களின் உயிர்களையும், உடமைகளையும் அழிப்பதற்கான யாழ். நகர் நோக்கிய தாக்குதலை ஆரம்பித்தார். இந்த இராணுவ நோக்குகளைச் சிதறடித்து மக்களுக்கும் தேசத்திற்கும் மிகக்குறைவான பாதிப்புகளுடன் தேசவிடுதலையைத் தொடரும் நோக்கில் விடுதலைப் புலிகள் வன்னிப் பிரதேசம் நோக்கித் தமது தலைமையகத்தை நகர்த்தினர்.

இதனையடுத்து, யாழ். குடாநாடு மக்கள் சிங்கள படைகளின் ஆக்கிரமிப்புக்குள் சிக்கிக் கொள்ள விரும்பாது, சிங்கள இறைமையை நிராகரித்து விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட வன்னிப் பிரதேசம் நோக்கி பாரிய இடப்பெயர்வை அக்டோபர் 30இல் மேற்கொண்டனர்.

மக்கள் நகரமுயற்சித்தமை சரிதான் என்பதை உறுதிபடுத்தும் வகையில், யாழ்நகரில் 80 வீதமான வீடுகள் குண்டுவீச்சுக்களால் அழிக்கப்பட்டன. அத்துடன், 70,000 மக்கள் குடியிருப்புகள் புல்டோசர்களால் தகர்க்கப்பட்டு இராணுவம் நிலைகொள்வதற்கான பாதுகாப்பு வேலியமைக்கப்பட்டது. கலாச்சாரச் சின்னங்கள், வழிபாட்டுத்தலங்கள் பாடசாலைகள் எல்லாமே குண்டுகளால் துளைக்கப்பட்டன. ஐரோப்பாவிலிருந்து வந்த ஆக்கிரமிப்புவாதிகள், குடியிருப்புக்களை அழித்ததாக யாழ்ப்பாண வரலாற்றில் இல்லை. ஆனால், சிங்களப் படைக் இதனைச் செய்தன. அதற்குப் பெயர் 'சமாதானத்திற்கான போர்' என்பதாகும்.

தொடர்ந்து, 19-04-95இல் கிளாலி கடலேரியில் படகுகளை குண்டுவீசித் தாக்கி மக்களின் பாரிய இடப்பெயர்வு வன்னிப் பிரதேசத்தில் முழுமை பெறாதவாறு தடுத்த சந்திரிகா அரசு, ஆயுத படைபல வலிமை கொண்டு மீளவும் யாழ். குடாநாட்டு மக்களைத் தமது இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசத்துள் முற்றுகையிட்டுக் கொண்டது.

இராணுவ முற்றுகைக்குள் மக்கள் வாழ்வதன் வாழ்வியல் சான்றுகளாக பாடசாலை சிறுமியர் மீதான பாலியல் வல்லுறவுகள், இளம்பெண்கள் மீதான பாலியல் மிருகத்தனங்கள், காணாமல் போதல், கைதாக்கப்படுவோர் சடலங்களாக மீட்கப்படுதல், அதிலும் மக்களுக்கு இனங்காணக்கூடிய அச்சத்தையும் எச்சரிக்கையையும் விடுக்கும்வகையில் கொடூரமான சித்திரவதைகள், நியாயங் கேட்க போனவர்களும் கொலை செய்யப்படுதல், சுதந்திரமான நடமாட்டங்களுக்குத் தடை, சுதந்திரமான வாழ்வு மறுப்பு என்பன வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

அதேவேளை, வன்னியில் சுதந்திரவாழ்வு உறுதிப்படுவதை தடுக்கும் வகையில் 18-07-96இல் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கூட தடைசெய்த சந்திரிகா அரசு, 26-07-96இல் 'சத்ஜெய' என்ற பெயரில் மீளவும் மக்கள் மீதான போரை ஆரம்பித்தது. உணவை ஆயுதமாக்கி சர்வதேச சட்டங்களை மீறிய சந்திரிகா அரசு மருந்தைத் தடைசெய்து மனித நேயத்திற்கு எதிரான குற்றங்களையும் செய்து வருகிறது.

வதிவிடம் இன்றி, உணவின்றி, மருந்தின்றி, கல்வி இன்றி, தொழில் இன்றி ஒரு மனித சமுதாயத்தை இராணுவ முற்றுகைப்படுத்தியுள்ள சந்திரிகாவின் அரசு, அதனை 'ஜனநாயக ஆட்சி எனவும் வர்ணித்துக் கொள்கிறது.

இத்தகைய மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்களுக்கு நடுவிலும் தளரா மனஉறுதியுடன் தமிழீழத் தேசத்தை மீள நிறுவும் புனிதப் பணியில் இரண்டாண்டுகளாக தமிழீழ மக்கள் நிலைத்து நிற்கின்றனர். வன்னியில் மட்டுமல்ல, தென்தமிழீழத்திலும் தமிழ் மக்கள் சொல்லொணா இராணுவ வதைகளுக்கு ஆளாகிய போதிலும் அவர்களின் மனஉறுதி விடுதலை வேட்கையாக நிமிர்ந்து நிற்கிறது.

இதனால்தான், "புலிகளை காட்டுக்குள் விரட்டிவிட்டேன். யாழ்ப்பாணத்தை பிடித்துவிட்டேன்" என்ற ரத்வத்த, முல்லைத்தீவு முதல் புளியங்குளம், மாங்குளம் காடுவரை தனது படைவீரர்கள் பலியாகும் தொகையை எண்ணிக் கொண்டிருக்கிறார். 'சத்ஜெய' முதல் 'ஜெயசிக்குறுய்' வரை மரண அடிவாங்கிக் கொண்டிருக்கிறது சிங்களப் படை. "எங்கள் மண்ணை படைபலம் கொண்டு ஆக்கிரமிக்கலாம். ஆனால், அதேமண்ணே ஆக்கிரமிப்பாளர்களுக்கு கல்லறையாக மாறும்" என எங்கள் தேசியத் தலைவர் கூறிய வார்த்தைகள் நனவாகிக் கொண்டிருக்கின்றன. இந்தவேளையில், சர்வதேச சக்திகளின் துணைகொண்டாவது தமிழீழ விடுதலையைத் தடுத்திட வேண்டுமென சந்திரிகா அரசு படாதபாடு படுகிறது. மக்களின் மனஉறுதியினை உடைப்பதற்கு இந்த மக்களுக்குத் துணையாக உள்ள சர்வதேச புலம்பெயர் தமிழர்களை அழிக்கத் துடிக்கிறார் சந்திரிகா. அவரின் கொலைக் கரத்திற்கு எங்கள் தேசப் புதல்வர்கள், லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் இருவரையும் நாம் இழந்த ஓராண்டும் இம்மாதத்தில் பூர்த்தியாகிறது. அந்த தியாகத் தீபங்கள் காட்டிய பாதையில் "எங்கள் மக்களை வாழவிடுங்கள்" என நாம் உரக்கக் குரல் கொடுத்திட அழைக்கிறது ஸ்கொட்லாந்து பொதுநலவாய மாநாட்டு முன்றல். குரல் கொடுத்து "அவர்களை வாழ விடுங்கள்" எனக் கேட்போம். எங்கள் மக்கள் பிரிவினை கோரவில்லை. தம் சொந்த தேசத்தில் வரலாற்றுத் தாயகத்தில் அதனை மீள அமைத்து, அமைதியாக வாழவே விரும்புகின்றனர் என்ற உண்மையை விளக்குவோம். அது மட்டுமல்ல, எங்களை வாழவிடுங்கள் என்ற எம்மக்கள் வாழ்வு மலர இயன்ற அனைத்தும் செய்வோம். ✷

# இன அழிப்பு யுத்தம்

அப்பாவிக் கொதுமக்கள் மீது மீண்டுமொரு கொடூரமான குண்டுவீச்சைச் சிறிலங்கா விமானப்படை நடத்தி முடித்துள்ளது. இதில் ஆறு பெண்கள் மற்றும் ஒரு ஆண் என ஏழு பேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர். இதில் ஒரு 20 வயது இளம் பெண்ணைத் தவிர ஏனையோர் அனைவரும் இளம் பருவமுள்ள குடும்பஸ்தர்கள். இப்படு கொலைகளைச் சிறிலங்கா அரசும் அதன் விமானப்படையும் வழமைபோலவே மறுக்கலாம். சிறிலங்கா இராணுவப் பேச்சாளரான சரத் முனசிங்கவோ அன்றி விமானப்படை அதிகாரிகளில் ஒருவரோ பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் இலக்கு மீதே குண்டு வீச்சுகள் நடத்தப்பட்டதாகவும் கொல்லப்பட்டவர்கள் அனைவருமே விடுதலைப் புலிகள் எனவும் தெரிவிக்கலாம். இதனை ஏதோ கற்பனையில் கூறுவதாக யாரும் கருதினால் அவர்கள் சிறிலங்கா அரசைப் பற்றி அறிந்து கொள்ளாதவர்களாகவோ அன்றி அறிந்து கொண்டும் சிறிலங்கா அரசிற்காகப் பேச முனைபவர்களாக மட்டுமே இருத்தல் வேண்டும். ஏனெனில், மேலே சிறிலங்கா அரசைப் பற்றிக் கூறப்பட்டவை யாவும் சிறிலங்கா அரசாங்கத்தின் கடந்தகால அறிவிப்புக் களின் துல்லியமான மதிப்பீடு ஆகும். இதே சமயம் படுகொலை விவகாரங்கள் சற்று கைமீறிப்போனால் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரோ, அன்றி ஜனாதிபதி கூட இனப்படுகொலைகளை மறுக்கலாம். விடுதலைப் புலிகளே கொல்லப்பட்டதாகவும் பாதிக்கப்பட்டதாகவும் காட்ட முனைய லாம். இதற்கு நவாலித் தேவாலயத்தின் மீதும் பாடசாலைகள் மீதும் மேற்கொண்ட தாக்குதல்களை சிறிலங்கா ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சும் மறுத்துரைத்தமை எடுத்துக்காட்டக்கூடியவை. ஆனால், சிறிலங்கா புரியும் இனப்படுகொலைகளை உலகத்தில் ஒரு தரப்பினர் கண்டு கொள்ளாது இருப்பதும் அதற்கு அளிக்கப்படும் நியாயங்களை ஒத்துக் கொள்வதுதான் வேடிக்கையானது. அத்தோடு, இப்படுகொலைகளை ஜனநாயக த்தின் பெயரிலும் மனித உரிமைகள் அடிப்படையிலும் நியாயப்படுத்த முனைவதுதான் அவஸ்தமானதாகும். சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே யுத்தத்தை நடாத்துவதாகக் கூறிக் கொள்கின்றது. ஆனால், இதுவரை யுத்தத்தில் கொல்லப்படட விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையை விட சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கையினால் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் எண்ணிக்கையானது மிக மிக அதிகமானதாகும். இதைத் தவிர விடுதலைப் புலிகளுக்கும் எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் விசாரணை இன்றி அடைக்கப்பட்டுள்ளனர். சித்திரவதைக ளுக்கு உள்ளாக்கியுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையானோர் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களே ஒழிய விடுதலைப் புலிகள் அல்ல. அதாவது, சிறையில் வாடுபவர்கள் அப்பாவித் தமிழ் இளைஞர்களே ஒழிய விடுதலைப் புலிகள் அல்லர். அத்தோடு, சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கையினால் இலட்சக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி அகதிகளாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்ந்து கொண்டிரு க்கின்றார்கள். மேலும், அரசு தமிழ் பிரதேசங்கள் மீது விடுத்துள்ள பொருளாதார மற்றும் எரிபொருள் தடையானது மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையைச் சீரழித்து ள்ளது. இந்த ரீதியில் யுத்தத்தை அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே நடத்துகின்றது என்பது பெரும் தவறானதாகும். யுத்தமானது ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களுக்கு எதிராகவே நடாத்தப்படுகின்றது. இது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையை மட்டும் மறுப்பதாக இல்லை. தமிழ் மக்களின் வாழ்வு நிலையையே மறுப்பதாகும். ஆனால், சிறிலங்கா அரசின் இந்நடவடிக்கைக்கு ஜனநாபகத்தின் பெயரிலும் மனித உரிமைகள் பெயரிலும் சிலர் ஆதரிக்க முனைவதானது, ஆதரவு தெரிவிப்போரின் ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியுமே சிந்திக்க வைக்கின்றது. ✷

நன்றி : ஈழநாதம்

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை 21- 11 - 1997 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**



www.tamilarangam.net



# "எம்மேல் எறிகணை ஏவவேண்டாமென புலிகளிடம் சொல்லுங்கள்"

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிங்களப் படையினர் விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களால் நிலைகுலைந்து போயுள்ளனர். 17ஆம் திகதி, மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு சிங்களப் படை முகாம்கள் விடுதலைப் புலிகளின் கடுமையான எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. மட்டக்களப்பு –வாழைச்சேனை வீதியில் அமைந்திருக்கும் மொறக்கொட்டாஞ்சேனை முகாம் மீதும் இம் முகாமில் இருந்து தெற்கே மூன்று மைல் தொலைவிலுள்ள சித்தாண்டி முகாம் மீதும் விடுதலைப் புலிகள் இலக்குத் தவறாது எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். மொறக்கொட்டாஞ்சேனை முகாமில் கப்டன் தர அதிகாரி ஒருவரும், சிப்பாய் ஒருவரும் உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்புச் செய்திகள் உறுதி செய்கின்றன.

மேலும், 14ஆம் திகதி அன்றும் மட்டக்களப்பு இராணுவத்தின் பிராந்தியத் தலைமையகம், விமானப்படை நிலையொன்று மற்றும் அரச அலுவலகம் ஒன்றும் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.

இந்த எறிகணைத் தாக்குதல்களால் நிலைகுலைந்துள்ள சிங்களப் படை, விடுதலைப் புலிகளிடம் தமது நிலைகள் மேல் எறிகணைத் தாக்குதல் நடாத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளுமாறு தமிழ் மக்களிடம் கேட்கத் தொடங்கியுள்ளனர்.

வாழைச்சேனையில் கண்ணன் கிராமம், புதுக்குடியிருப்பு, விநாயகபுரம் பகுதிகளைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் மக்களை பொதுமைதானத்துக்கு அழைத்து வந்து, அங்கு சிங்கள இராணுவ அதிகாரி ஒருவர் தமிழில் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## 'ஜெயசிக்குறு"வை தாங்கிப் பிடிக்க . . .

தோல்வியின் இறுதிநிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் பாதைத் திறப்பு நடவடிக்கை, தனது அரசியல் பாதையை மூடும் முன்னர் அதற்குப் புத்துயிர் கொடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

திருமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் எட்டு இராணுவ முகாம்களையும் திருகோணமலை நகர் பகுதிகளில் சில இராணுவ முகாம்களையும் அவசரம் அவசரமாக மூடிய சிறிலங்கா இராணுவம், அப்படையினரை வன்னிக் களத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை, யாழ். குடாநாட்டிலும் சில பகுதிகளிலிருந்து இராணுவம் விலக்கப்பட்டு வன்னிக்கு விரைவதாகத் தெரிகிறது. மூதூரில் மூடப்பட்ட முகாம்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க, வன்னிக் களம் மிகவும் தீவிரமடைந்து வருவதைத் தொடர்ந்து, தேச விடுதலையை விரைவாக்க – விடுதலைப் புலிகளின் கரத்தைப் பலப்படுத்த இளம் வயதினர்கள் போராட்டத்தில் இணைந்து வருவதாக வன்னியிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறாக வன்னியில் தமக்கு ஏற்படும் பேரிழப்புக்களைக் கண்டு சினம்கொண்ட சிங்களப் படையினர், தமது பழிவாங்கல் நடவடிக்கைகளைத் தமது ஆக்கிரமிப்பில் உள்ள பொது மக்களிடம் காண்பிக்கின்றனர். வடமராட்சி நாகர் கோவில் குடாரப்பு கடற்கரைப் பகுதியில் தலைதுண்டிக்கப்பட்ட ஒரு பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இத் தமிழ்ப் பெண்ணின் மார்புப் பகுதி வெட்டப்பட்டிருந்தது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. கொடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டே இப் பெண்மணி கொல்லப்பட்டுள்ளார்.

மேலும், இம் மாதம் 14ஆம் திகதி, நாவாந்துறையில் தமிழ் பொதுமகன் ஒருவர் சந்திரிகா படையால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இதேநாளில் மீசாலையில் ஓர் பொதுமகன் கைகள் கட்டப்பட்ட நிலையில் கொல்லப்பட்டு வீதியில் வீசப்பட்டுள்ளார். மேலும், மீசாலையில் சிங்களப் படை, பொதுமக்கள் மேல் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகம் ஒன்றில் 5 வயது சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்.

## "ஜெயசிக்குறு" திணறுகிறது . . .

திகதி எதிரியின் போர் டாங்கி ஒன்று விடுதலைப் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது. சிங்களப் படை முன்னேற முயன்றபொழுது அதனை புலிவீரர்கள் வீராவேசத்துடன் எதிர்த்துத் தாக்கி மீளவும் விரட்டி அடித்தனர். இச் சண்டைகளில் பதினைந்து விடுதலைப் புலிவீரர்கள் வீரச்சாவுற்றனர்.

தொடர்ந்து கருப்புக்குத்திச் சந்தியில் இருந்து பெரியமடு வரை விரட்டி அடிக்கப்பட்ட சிறிலங்காப் படையினர் கறிப்பட்டிமுறிப்பில் தனிமைப்படுத்தப்பட்டு, தமது தலைமைகளுடனான தொடர்புகள் அனைத்தையும் இழந்தனர். இவர்களுடன் மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்த சிறிலங்காப் படையினர் பல வழிகளில் முயற்சித்தனர். எனினும், விடுதலைப் புலிகளின் இடைவிடாத் தாக்குதல்கள் அவர்களின் முயற்சியை முறியடித்துவிட்டது.

இதன்பின்னர் வான்அலை தொடர்பினை மட்டுமே சிங்களப் படைத்தரப்பால் மேற்கொள்ளக் கூடியநிலையில், கறிப்பட்டிமுறிப்பில் தனிமையுற்ற இராணுவத்தினர் மரணபயம் கொண்டு வெவ்வேறு திசைகளில் காடுகளுக்குள் மறைந்து கொள்ளத் தொடங்கினர். சிங்களப் படைத்தரப்பு, தனிமைப்படுத்தப்பட்ட படையணியுடன் தொடர்புகளை ஏற்படுத்தவிடாமல் நடைபெற்ற சண்டைகளில் ஒன்பது புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

தொடர்ந்து சண்டையிடும் விடுதலைப் புலிகளை எதிர்கொள்ளத் திணறும் சிங்களப் படையினர், தமது இயலாத் தன்மையை அப்பாவிப் பொது மக்கள் மீதான பழிவாங்கல் தாக்குதலால் வெளிப்படுத்துகின்றனர். மாங்குளம் பகுதி மீது மழைபோல் எறிகணைகள் வீசப்படுகின்றன. உதவிக்கு குண்டுவீச்சு விமானங்களும் தமது பங்கை ஏற்று குடியிருப்புக்கள் மீது பலமான குண்டு வீச்சுக்களை மேற்கொண்டுள்ளன.

ஆயினும், இப் பாரிய சேதங்களை மூடிமறைப்பதற்கு சிறிலங்கா அரசு, தன்னாலான அனைத்து முயற்சிகளையும் செய்துள்ளது. இதனையடுத்து, ஜெயசிக்குறு படையணி மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுத, தளபாட, வாகன விபரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

'பவள்' கவச வாகனங்கள் – 2

புல்டோசர்கள் – 8

உழவு இயந்திரம் – 16

உட்பட 34 பல்வேறு இராணுவ வாகனங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், சிங்கள இராணுவ உயர் அதிகாரிகள் வருகை தரும் போது தங்குவதற்கென நிறுத்தப்பட்டிருந்த குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய வாகனம் ஒன்றும் விடுதலைப் புலிகள் வசமாகியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றுடன்,

ரவைகள் – 1,200,000

மோட்டார் பீரங்கி எறிகணைகள் – 12,000

81 மீ.மீ மோட்டார் – 14

60 மீ.மீ மோட்டார் – 22

உட்பட, வேறு பல இராணுவ உபகரணங்களும் புலிகள் வசமாகியுள்ளன.

## தற்காலிக முகாம்கள் தகர்ப்பு . . .

பகுதிகளிலும் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் சிங்களப் படையின் இருமுகாம்களும் இரு ஆயுதக் கிடங்குகளும் கைப்பற்றப்பட்டன. இவ் ஆயுதக் கிடங்குகளில் இருந்தே மோட்டார்கள், எறிகணைகள், ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், பல வாகனங்களும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன. இந்த ஆயுதக் கிடங்குகளில் இருந்து நூறு மில்லியன் ரூபாவுக்கு மேலான ஆயுதங்கள் விடுதலைப் புலிகள் வசம் சிக்கியுள்ளதாகவும், படையினரில் நூற்றுக்கும் மேலானவர்கள் கொல்லப்பட இருநூறுக்கும் மேலானவர்கள் கடுங்காயங்கள் அடைந்துள்ளதாகவும் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வெற்றித் தாக்குதல்களில் எழுபத்திரண்டு விடுதலைப் புலிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். ❑

# 60,000 சிறுவர்க்கு கல்வி மறுப்பு
# 40,000க்கு மேல் நோயால் பாதிப்பு
## சிசு மரணமும் அதிகரிப்பு

61,904 தமிழ்ச் சிறுவர்களின் கல்வி சிறிலங்காவால் மறுக்கப்பட்டுள்ளது. இச் சிறார்கள் கிளிநொச்சி (30,077), முல்லைத்தீவு (25,286), மன்னார் (4,157), வவுனியா (2,384) மாவட்டங்களில் கல்வி வசதியின்றி தவிக்கின்றனர். இடம்பெயர்ந்த இச்சிறுவர்களின் கல்வி மட்டுமன்றி மருத்துவ வசதிகள், ஊட்டச் சத்துணவு என்பனவும் சிறிலங்காவால் வழங்கப்படாது விடப்பட்டுள்ளது. இதனால் இவ் இளம் தமிழ்க் குழந்தைகள் நலிந்து மெலிந்து வளர்ச்சி குன்றிக் காணப்படுகின்றனர். போதாக்குறைக்கு இச் சிறுவர்கள் குண்டுவீச்சுக்களுக்கும் எறிகணைத் தாக்குதல்களுக்கும் இலக்குகளாகவும் ஆக்கப்படுகின்றனர்.

இவர்களின் கல்வி வசதி குறித்து சிறிலங்காவின் கல்வி அமைச்சுக்கு விடுத்த உதவிக் கோரிக்கைக்கு நிதி உதவி அளிக்க முடியாது என மறுத்ததுடன், பாடசாலைகளே தங்கள் சொந்த மூலவளங்களை உருவாக்கி செயற்பட வேண்டுமெனவும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், 40,958 பொது மக்கள் முல்லைத்தீவு, அக்கராயன் வைத்தியசாலைகளில் மருந்துத் தடைகளுக்கு மத்தியிலும் கடந்த மாதத்தில் சிகிச்சை பெற்றுள்ளனர். முல்லைத்தீவு வைத்தியசாலையில் மட்டும் 19,608 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். சராசரி நாளொன்றுக்கு 654 நோயாளிகள் மருத்துவமனைக்கு வந்துள்ளனர். இவர்களில் சராசரி 42பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். இந்த வைத்தியசாலையில் செப்டெம்பர் மாதத்தில் 125 குழந்தைகள் பிறந்துள்ளன. அதேவேளை, பிறந்தவுடன் குழந்தைகள் இறக்கும் வீதமும் போசாக்கின்மையால் அதிகரித்துள்ளது. இவ் மருத்துவமனையில் 120 சத்திரசிகிச்சைகளும் நடைபெற்றுள்ளது. செப்டெம்பரில் மட்டும் வன்னி அக்கராயன் வைத்தியசாலையில் 21,350 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளது இங்கு மிகவும் கவனத்திற்குரியது.

## புல்மோட்டையில் பெரும் கடற்சமர் . . .

கடற்கரும்புலிகளின் தாக்குதலில் ஒரு டோராப் படகு சிதறடிக்கப்பட்டது. அதில் இருந்த கடற்படையினர் அனைவரும் கொல்லப்பட்டனர். அதிகாலை ஐந்து மணிவரை தொடர்ந்த தாக்குதலில் மற்றுமொரு டோரா கடும் சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடற்படையினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

இச் சமரில் ஒன்பதுக்கு மேற்பட்ட கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். கடற்படையினருக்கு ஏற்பட்ட இவ் இழப்புக் குறித்து சிங்கள படைத்தலைமைக்குத் திடீர் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

சுமார் எட்டு மணித்தியாலங்கள் நடைபெற்ற இந் நீண்ட கடற்சமரில், இரு கடற் கரும்புலிகள் உட்பட ஐந்து கடற்புலி வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்.

தாயக விடுதலைத் தாகத்துடன் கடற்சமராடி விதையாகி வீழ்ந்த,

கடற்கரும்புலி மேஜர் சிறீ

கடற்கரும்புலிகப்டன் சின்னவன்

கடற்புலி மேஜர் வீரமணி

கடற்புலி கப்டன் நவநீதன்

கடற்புலி கப்டன் வரதன் ஆகிய மாவீரர்களுக்கு எமது வீர வணக்கம்.

www.tamilarangam.net



# அனுமார் வாலும் - ஆப்பிழுத்த குரங்கும்

யாழ்ப்பாணத்தை – கிளிநொச்சியை ஆக்கிரமித்த பின்னர் வெற்றி மமதையில் சிங்களப் படைத் தலைமை திளைத்தது. "புலிகளின் கதை முடிகின்றது" எனக் கூட்டிக் கழித்துக் கணித்தது. களைத்த புலிகளை இறுதிவரை துரத்திச் சென்று கொல்வது என்ற வேட்டைத் தந்திரத்தைக் கைக்கொண்டு புலிகள் இயக்கத்தை அழித்துவிடலாம் என்று அது கருதியது. அந்த நோக்கத்துடன் வன்னியின் புவியியல் மையத்தை ஊடறுத்து 'ஜயசிக்குறுய்' ஆரம்பித்தது.

13 வைகாசி 1997 அன்று, நெடுங்கேணியை நோக்கி – ஓமந்தையை நோக்கி என இருமுனைகளூடாக படை நகர்த்தப்பட்டது.

நெடுங்கேணியிலிருந்து – நைனாமடு ஊடாக புளியங்குளத்தை நோக்கி ஒரு நகர்வுப் பாதையையும் ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணச் சாலை வழியே புளியங்குளத்தை நோக்கிய அடுத்த நகர்வுப் பாதையையும் 'ஜயசிக்குறுய்' கொண்டமைந்திருந்தது.

இருமுனைப் படைகளும் புளியங்குளச் சந்தியைக் கைப்பற்றிச் சந்தித்தால் இரு நகர்வுப் பாதைகளுக்கும் இடையேயுள்ள நிலப்பகுதியை இடுக்கிப் பிடிக்குள் அகப்பட்ட பகுதியாக அமுக்கிப் பிடிக்கும் திட்டத்தை அமுலாக்கிவிடலாம் என்று அரசபடைகள் எண்ணுகின்றன.

எனினும், புளியங்குளம் சந்தியை கைப்பற்ற முடியாது – அதற்கு அருகில் நின்றவாறு கடந்த 70 நாட்களாக சிங்களப் படைகள் திண்டாடுகின்றன. இதுவரை நான்கு பாரிய முயற்சிகளை எடுத்து தோற்றுள்ளன.

22-06-97 அன்று ஒரு நகர்வைச் செய்த படையினர், ஒரு டாங்கியை இழந்து முயற்சியில் தோற்றனர்.

அதுபோல, 19-08-97 அன்றும் ஒரு முயற்சியை எடுத்து இரண்டு டாங்கிகளை இழந்து ஒரு துருப்புக் காவியை புலிகளிடம் பறிகொடுத்து நகரமுடியாது முடங்கினர்.

மீண்டும் அடுத்தநாள் 20-08-97 அன்றும் ஒரு நகர்வை எடுத்து ஒரு டாங்கியை இழந்து முயற்சியில் தோற்று நின்றனர். அதுபோல 26-08-97 அன்றும் ஒரு டாங்கை இழந்து முயற்சியில் தோற்று நிற்கின்றனர்.

வவுனியா – கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்றி குடாநாட்டிற்கு ஒரு பிரயாணப் பதையைத் திறப்பதே 'ஜயசிக்குறுய்'யின் இராணுவ இலக்கு என, ரத்வத்த, ஏற்கெனவே பகிரங்கப் படுத்திமிருந்தார்.

படையினரின் நகர்வு முயற்சிக்கு குறுக்கே புலிகளின் பலம் தடைக்கல்லாக நின்றபோது, 'புதிய வழிகளைக் கடைப்பிடித்து' நடவடிக்கையைத் தொடரப்போவதாக, சிங்கள இராணுவத் தளபதி றோகான் தளுவத்த சூளுரைத்திருந்தார்.

புலிகளின் கோட்டையாகிய குடாநாட்டைக் கைப்பற்றி வெற்றி கொண்ட தமது படையினருக்கு, ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி வரையான 12 கி.மீ. நெடுஞ்சாலையைக் கைப்பற்றி நிலைகொண்ட தமது படையினருக்கு, 'ஜயசிக்குறுய்'யின் இராணுவ இலக்கை எய்துவதற்கு எதுவுமே தடையாக இருக்க மாட்டாதென்றே – சிங்களத் தளபதிகள் – இறுமாந்திருந்தனர்.

சுமார் 50 நாட்கள் தொடர்ந்து நடந்த சூரியக்கதிர் 1 நடவடிக்கையில் ஏறக்குறைய 750 துருப்புக்களை இழந்து, சிங்களப் படை வலிகாமத்தைக் கைப்பற்றியிருந்தது. அதுபோல சுமார் மூன்று மாதங்களாக – இடைவிட்டு – நடந்த 'சத்ஜெய' சமரில் சுமார் 500 துருப்புக்களை இழந்து கிளிநொச்சியைக் கைப்பற்றியிருந்தது.

அப்படியாயின் 110 நாட்களையும் கடந்த நிலையிலும் 'ஜயசிக்குறுய்' ஏன் தடுமாறுகின்றது!

'றிவிரச'விலும், 'சத்ஜெய'விலும் புலிகள் இயக்கம் தனது படைபலத்தைப் பாதுகாப்பதில் முன்னுரிமை கொடுத்தது.

**இதுவரை, ஜயசிக்குறுய்யில், 1200 க்கு மேற்பட்ட சிங்களப் படையினர் பலியாகிவிட்டனர். 3500 பேர் காயப்பட்டுள்ளனர். 15 டாங்கிகளை, 4 "ஆட்டிலறி"களை இழந்துள்ளனர். பல மரபுப் போர் ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர். சுமார் 500 புலிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்.**

இதனால், நிலத்தை ஆக்கிரமிப்பதில் சிங்களப் படைக்கு வாய்ப்பேற்பட்டது.

'ஜயசிக்குறுய்'யின் போது சிங்களப் படையின் படைபலத்தைச் சிதைப்பதிலேயே, புலிகள், முழுமூச்சாய் இருக்கின்றனர். இதனால், முன்னேறி நிலத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர – சிங்களப் படை – சிரமப்படுகின்றது.

'ஜயசிக்குறுய்' 110 நாட்களை அடைந்துவிட்டது. இதுவரை 1200 படையினரைப் பலிகொடுத்து விட்டது. 3500 படையினர் காயம்பட்டனர் என, இராணுவப் பேச்சாளர் ஒப்புக் கொண்டிருந்தார். 13 டாங்கிகளை இழந்துவிட்டது. 4 'ஆட்டிலறிகளை' இழந்துவிட்டது. வண்டி வண்டியாக எறிகணைகள் – குண்டுகளை இழந்துவிட்டது. ஒரு துருப்புக்காவி உட்பட்ட பல மரபுப் போர் ஆயுதங்களை வெடிப் பொருட்களை பறிகொடுத்து விட்டது. ஆயினும், இலக்கின் மூன்றில் ஒரு பகுதியையே, அதனால் அடைய முடிந்துள்ளது.

**சூரியக்கதிரிலும் – சத்ஜெயவிலும் – புலிகள் இயக்கம் – தனது படைபலத்தின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை கொடுத்தது. ஜயசிக்குறுயின்போது சிங்கள இராணுவத்தின் படைபலத்தை சிதைப்பதிலேயே புலிகள் முழுமூச்சாக உள்ளனர்.**

இந்த இராணுவ நடவடிக்கையில் புலிகளுக்கு ஏற்பட்ட ஆள் இழப்புக்களை, அரசு, மிகைப்படுத்திப் பிரச்சாரம் செய்கின்றது. ஒவ்வொரு சண்டைகளின் போதும் புலிகளின் இழப்பு என்று சொல்லி இராணுவப் பேச்சாளர், சரத் முனசிங்கா வெளியிடும் கணக்கு விபரங்களை ஒன்றுகூட்டிப் பார்த்தால்



குறைந்த வளங்களை வைத்துக்கொண்டு அதியுச்ச பயனைப்பெறும் போர்க்கலையில் தலைவர் பிரபாகரன் ஒரு மேதை

அந்தத் தொகை 2500 ற்கும் அதிகமாக வரும்.

சிங்களப் படை வீரர்களையும் – சிங்கள மக்களையும் உற்சாகப்படுத்துவதற்காக படைத்தரப்பு இழப்பைவிட, மூன்று – நான்கு மடங்குகளாக புலிகளின் ஆள் இழப்பைச் சொல்லிக் காட்டுவது சிறிலங்கா அரசின் ஒரு இராணுவ மரபு. அத்துடன், படையினர் பயன்படுத்தும் பிரமாண்டமான படைக்கல சக்தியின் தொகையைக் கருத்தில் எடுத்தால், பெருமளவு புலிகள் பலியாக வேண்டும் என்று சிங்களத் தரப்பு ஊகிக்கின்றது. ஆனால், புலிகளின் போரிடும் திறனும் மற்றும் எதிர்த்தந்திரோபாயங்கள் காரணமாகவும் தமது தரப்பு இழப்புக்களை புலிகள் எப்போதுமே ஒரு கட்டுக்குள் வைத்திருக்கின்றனர்.

உண்மையில், இதுவரை 'ஜயசிக்குறுய்' சண்டைகளில் சுமார் 500 புலிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். சில நூறுபேர் காயமடைந்துள்ளனர். ஒப்பீட்டளவில் குறைந்தளவு இழப்புகளுடன் படையினர்க்கு பாரிய ஆள் – ஆயுத இழப்புகளை ஏற்படுத்தி – புலிகள் – சாதனை புரிந்துள்ளனர். அத்துடன், 'ஜயசிக்குறுய்'யின் இராணுவ இலக்கையும் கேள்விக்குறியாக்கியுள்ளனர்.

**ஒப்பீட்டளவில், குறைந்த ஆள் எண்ணிக்கையையும் சொற்ப படைக்கலங்களையும் வைத்துக் கொண்டு, இவற்றிலிருந்து அதிஉச்சப் பயனைப் பெற்றுக் கொள்ளும் போர்க்கலையில், தலைவர் பிரபாகரன், ஒரு மேதையாக விளங்குகின்றார்.**

களத்தில் பலியாகும் அல்லது படுகாயமடையும் படையினரின் இடத்தை நிரப்பவென்றும் – கைப்பற்றப்படும் வீதியின் நீளம் கூடக் கூட அதைப் பாதுகாப்பதற்கென்றும் 'ஜயசிக்குறுய்' படைக்கு மேலதிக ஆட்கள் தேவைப்படுகின்றனர். இந்த மேலதிக ஆட்பற்றாக்குறையை ஈடுசெய்ய, அரசு, எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பது திண்ணம். ஆனால், இது நடைபெறும்போது ஏதோ ஒரு களமுனை – அது குடாநாடு அல்லது கிழக்கு – பலவீனமடையும். பலவீனமான பகுதிகள் மீது புலிகள் பலமான தாக்குதலை நடாத்தலாம் என்ற யதார்த்தமான அம்சத்தை சிங்களத்தின் இராணுவ ஆய்வாளர்கள் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

'ஜயசிக்குறுய்' சமரைப் பொறுத்தவகையில் தாக்குதற் போர்முறையிலும் (OFFENSIVE) – தடுத்து நிறுத்த முயலும் தாற்காப்புப் போர் (DEFENSIVE) முறைமையிலும் புலிகள், திறமைகாட்டி வருகின்றனர்.

'ஜயசிக்குறுய்' ஆரம்பமாவதற்கு முன்னரே – தலைவர் பிரபாகரன் – எடுத்த முன்னேற்பாடுகளே புலிவீரர்களின் இந்தப் போர்ப் புலமைக்கு பிரதான காரணம்.

போராளிகளின் சண்டைத் திறனை மேலும் வளர்த்துவிடும் செயல்முறைகளை வகுத்துச் செயற்படுத்தியும் – மரபுப் போர் ஆயுதங்களை எடுத்து – அவற்றைத் திறமையாகக் கையாளப் பயிற்றுவித்தும் – ஆலோசனைகள் கூறியும் தமிழர் சேனையின் போர்வலுவை உயர்த்தியிருந்தார். இந்தப் போர்வலு, 'ஜயசிக்குறுய்'யின் இராணுவ இலட்சியத்திற்கு பலத்த சவாலாக இருக்கின்றது.

சிங்களத்துப் படைகளுடன் ஒப்பிடும் போது குறைந்த ஆள் எண்ணிக்கையையும் – சொற்ப படைக்கலங்களையும் வைத்துக் கொண்டு அவற்றிலிருந்து அதிக உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ளும் போர்க்கலையில் – தலைவர் பிரபாகரன் – ஒரு மேதையாகவே – உலகில் இன்று – கணிக்கப்படுகின்றார்.

**நன்றி : 'விடுதலைப்புலிகள்'**
**(ஆடி - ஆவணி 97)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பும்

இனப்பிரச்சினையின் அரசியல் யதார்த்தத்தை சிங்கள அரசுகள் புரிந்துகொள்ள மறுப்பதைப்போலவே, விடுதலைப் போராட்டத்தின் இராணுவப் பண்பையும் கிரகித்துக்கொள்ள அவை பிடிவாதமாக மறுக்கின்றன.

சிங்களப் படைகளும், புலிகள் இயக்கத்திற்குமிடையே நடைபெறும் போரை மதிப்பீடு செய்துபார்ப்பதற்காக இருபகுதிப் படைகளினதும் ஆள்

**நிலங்களைக் கைப்பற்றுவது – வளங்களை அபகரிப்பது – இனப்படுகொலைகளை நிகழ்த்துவது என்பவை ஆக்கிரமிப்பு அரசுகளின் முக்கிய பண்புகளாகும். இந்த ஆக்கிரமிப்புப் போர்ப்பண்புதான் சிங்களப் படைகளது போர்ச் செயற்பாட்டின் அடிநாதமாகும்.**

எண்ணிக்கைகளையும் – ஆயுத வகைகளையும், தொகைகளையும் மட்டுமே சிங்கள அரசியல்வாதிகள் கணக்கிலெடுத்து – தவறான முடிவுகளை எடுக்கின்றனர். ஆனால், போரிடும் இருபகுதிப் படைகளினதும் போர்ப் பண்புகள் – இந்தப் பண்புகள் – போரில், சிறுகச்சிறுக ஏற்படுத்தும் பாரிய இராணுவத் தாக்கங்களை சிங்களத் தலைவர்கள் ஏறெடுத்துப் பார்க்க விரும்புவதில்லை.

சிங்கள தேசத்தைப் பொறுத்தவரை, அது சகல வசதி வாய்ப்புக்களையும் பெற்ற அரசு. அதனிடம் ஏறக்குறைய ஒரு இலட்சம் ஆட்தொகையைக் கொண்ட ஒரு நிரந்தரப் படை உண்டு. சிங்களத்தின் இந்தப் படை, தனது நில எல்லைகளைக் கடந்து, தமிழர் தாயகத்தை கைப்பற்றி ஒரு ஆக்கிரமிப்புப் படையாகச் செயற்படு கின்றது.

நிலங்களைக் கைப்பற்றுவது – வளங்களை அபகரிப்பது – இனப்படுகொலைகளை நிகழ்த்துவது என்பவை ஆக்கிரமிப்பு அரசுகளின் முக்கிய பண்புகளாகும். இந்த ஆக்கிரமிப்புப் போர்ப்பண்புதான் சிங்களப் படைகளது போர்ச் செயற்பாட்டின் அடிநாதமாகும்.

ஒரு போரின் முடிவை, அது வெற்றியோ – தோல்வியோ விரைவாகக் காண்பது ஆக்கிரமிப்புப் போர்ப் பண்பின் பொது இயல்பாகும். ஏனெனில், இந்தவகைப் போர்ப் பண்புடைய படையிடம் படைபலம் அதாவது ஆள், ஆயுதவளம் அபரிதமாகக் காணப்படும். எனவே, போரை நடாத்துவதில் வேகத்தைக் கடைப்பிடிப்பது இதற்கு இலகுவானதாக அமைந்துவிடும். ஆக்கிரமிப்புப் போர்ப்பண்புடைய படைக்கு இருக்கின்ற சாதகமான இராணுவ அம்சம் இதுவாகும். எனினும், வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய காலத்திற்குள் போர் நடந்து முடிந்துவிட வேண்டும். அப்போதுதான் இந்த வேகம் வெற்றிக்கு வழிசமைக்கும். மாறாக, நீண்ட காலத்திற்குப் போர் இழுபடுமாயின், ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பையுடைய படைகள் அதற்கு ஈடுகொடுக்க முடியாது திணறத் தொடங்கும். இது ஆக்கிரமிப்புப் போர்ப்பண்புப் படைக்குள்ள முக்கிய பலவீனமாகும். ஏனெனில், இத்தகைய போர்ப்பண்புடைய படையினர்க்கு ஒரு நீதியான அரசியல் இலட்சியம் இருக்கமாட்டாது. இனவெறியால் உந்தப்பட்டு வேற்று இன மண்ணை ஆக்கிரமிக்க முயலும் ஆசை, ஒரு அரசியல் இலட்சியமாக அமைய முடியாது. எனவே, ஒரு எல்லைக்கு அப்பால், துன்பங்களைத் தொடராக எதிர்கொண்டு நெருக்கடிக்குள் நின்றுநிலைத்துப் போர்புரியும் மனஓர்மம் ஆக்கிரமிப்புப் படையினரிடம் இருக்க மாட்டாது. நாட்கள் செல்லச்செல்ல, தாங்கள் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றோம் என்ற உணர்வு இவர்களிடம் மேலெழும்.

இவ்விதம் போர் இழுபடும்போது, அதன் பக்கவிளைவுகளான பல்வேறு வகைப்பட்ட நெருக்கடிகளுக்கு – வளப்பற்றாக் குறைகளுக்கு முகங் கொடுத்து – தாக்குப் பிடிக்கமுடியாமல் ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பையுடைய படைகள் தடுமாறும். போர்வீரர்கள் மத்தியில் குழப்பமும் – விரக்தியும் – பயமும் குடிகொள்ளும். இவை ஆக்கிரமிப்புப் போர்ப் பண்பிற்கிருக்கின்ற பாதக அம்சங்களாகும். இந்தப் பண்பு சிங்களப் படைக்கும் பொருந்தும்.

# விடுதலைப் போர்ப்பண்பும்

இதேவேளை, ஆக்கிரமிப்பிற்கு எதிரான – அல்லது – இனஒடுக்குமுறைக்கெதிரான – விடுதலைப் போராட்டங்கள் தமக்கே உரித்தான தனித்துவமான போர்ப் பண்பைத் தன்னகத்தே கொண்டுள்ளன. விடுதலைப் போர் என்பது மக்கள் அனைவரும், ஏதோ ஒருவகையில் பங்கெடுக்கும் மக்கள் போர் ஆகும். இந்த மக்கள் போரின் அடிப்படை



இலட்சியம் தற்காப்பு. எனவே, போரையும் – தம்மையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஒரு புறச்சூழல் அவர்களுக்கு இருக்கும். சுதந்திரம் – பாதுகாப்பு – கௌரவம் என்ற விடுதலை இலட்சியங்கள் அவர்களிடம் ஆழ வேர் கொண்டிருக்கும். தற்காப்புப் போர் அல்லது ஒரு இனத்தின் வாழ்விற்கான போர் என்ற வகையில் விடுதலைப் போராளிகளிடம் அதிஉயர் அர்ப்பணிப்பு உணர்வும் – அபார சாதனைகள் படைக்கும் உறுதியும் இருக்கும். அத்துடன், அனைத்தையும் தனது ஆளுமையின் கீழ் நெறிப்படுத்தும் திறமையும் – இலட்சிய உறுதியும் – எதற்கும் சளைக்காத பண்பும் கொண்ட தலைமையை விடுதலைப் போராட்டம் பெற்றிருக்கும்.

இவை காரணமாக, **போரின் இறுதி வெற்றியைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் வீரர்களின் போர் உறுதி, அவர்களின் போர்த்திறன் – தாக்குப்பிடிக்கும் தன்மை – திறமையான தலைமை என்பவற்றில் விடுதலைப் போர்ப்பண்பைக் கொண்ட படையேமேன் நிலையில் இருக்கும். இந்த விடுதலைப் போர்ப்பண்புதான் புலிகள் இயக்கத்தினது போராட்டச் செயற்பாட்டின் மையமாகும்.** புலிகளின் பலம் இந்த விடுதலைப் போர்ப்பண்பில் ஆழ வேர் விட்டுள்ளது.

ஒரு விடுதலைப் போராட்டம் இறுதி வெற்றியைப் பெற நீண்டகாலம் எடுக்கும். ஏனெனில், எதிரி அரசின் ஆக்கிரமிப்புப் படையைப் போலல்லாது விடுதலைச் சேனை தனது ஆட்தொகையை – அதன் ஆயுத வளத்தை – சண்டைத்திறனை அரிவரியிலிருந்து தொடங்கி, பல்வேறு தடைகள் – பின்னடைவுகளைத் தாண்டி படிப்படியாக முழுமை அடைய வேண்டும். இதனால், நீண்டகாலப் போர் என்பது விடுதலைப் போர்ப் பண்பின் கருவிலேயே கலந்துள்ளது. ஆகவே, காலம் கனியும்வரை அதிக காலத்திற்குப் போரை உயிர்த்துடிப்புடன் நகர்த்திச் செல்லும் விசேட சக்தி விடுதலைப் போர்ப்பண்பிற்குண்டு. அத்துடன், நீண்டகாலப் போரின் எதிர்விளைவுகளான பல்வேறு நெருக்கடிகள் – வளப்பற்றாக்குறைகள் என்பன விடுதலைப் போர்ப்பண்புடன் இசைவாக்கம் கொண்டதாக இருக்கும். அதாவது, தாக்குப்பிடித்தல் என்பது விடுதலைப் போர்ப்பண்பின் கூடப் பிறந்த குணம். நீண்டகாலப் போரில் வெற்றி என்ற மந்திரம், இந்த தாக்குப் பிடிக்கும் சக்திக்குள்ளேதான் குடிகொண்டுள்ளது. இத்தகைய போர்ப்பண்புகள் ஆக்கிரமிப்புப்படைக்கு சிம்மசொப்பனமாக விளங்கும். தாக்குப்பிடித்து முன்னேறும் இந்த விடுதலைப் போர்ப்பண்பைப் பொறுத்தவரையில், புலிகள் இயக்கம், உலகின் மிகச் சிறந்த உதாரணமாக இன்று விளங்குகின்றது.

இதேவேளை, ஆக்கிரமிப்புப் படைகளைப் பொறுத்தவகையில், நிலங்களைக் கைப்பற்றல் என்ற இராணுவ விடயமே வெற்றியின் இறுதி அம்சமாக நோக்கப்படுகின்றது. இது காரணமாக, நிலங்களை அதிகளவில் கைப்பற்றுவதிலேயே, அவை, அதிக கவனத்தைச் செலுத்தும். அதனுடைய இராணுவ பலம் காரணமாக உடனடியாக அது சாத்தியமானதாகவும் இருக்கும். ஆகவே, ஒரு விடுதலை இயக்கத்திற்கு எதிரான போரில், தான்வெல்வது போன்றதொரு தோற்றப்பாட்டை ஆக்கிரமிப்புப் படைகள், அடிக்கடி தோற்றுவிக்கும். சாதாரண கண்களுக்கு இது வெற்றி போலவே தென்படும். சிங்களப் படையின் தற்போதைய வெற்றித் தோற்றத்திற்கு இந்தப் போர்ப்பண்பு வேறுபாடு புரியாமை முக்கிய காரணமாகும்.

விடுதலைப் போர்ப்பண்பைப் பொறுத்தளவில், எதிரியின் படைகளை, சதா சண்டையிடுவதன் மூலம் இழப்புக்களை ஏற்படுத்தி – போரில் வெல்ல முடியாது என்ற மனச்சலிப்பை உண்டுபண்ணி – எதிரிப்படையை செயலிழக்கச் செய்து – மீளமுடியாத நெருக்கடிக்குள் தள்ளிவிட்டு நிலங்களை மீட்டெடுப்பதுதான் வெற்றியின் இறுதி அம்சமாக நோக்கப்படுகின்றது. எனவே, ஒரு விடுதலைச் சேனையானது தேவையான ஆட்பலத்தையும் – போதியளவு மரபுப்போர் ஆயுதங்களை பெறும்வரையிலும் – அத்துடன் – எதிரிப்படை தளர்வடையும் வரையும் நிலத்தைக் கைப்பற்றி வைத்திருப்பதில் அதிக கவனம் செலுத்த விரும்பாது.

அதிஉயர்பலத்தைத் திரட்டிக்கொண்டு ஆக்கிரமிப்புப் போரை நடாத்தச் சென்ற பல இராணுவ வல்லரசுகள் விடுதலைப் போர்ப்பண்பை அடிநாதமாகக் கொண்ட விடுதலை இயக்கங்களுக்கு முன்னால் ஈடுகொடுக்க முடியாமல் படைகளை விலக்கிக் கொண்ட போர்வரலாறுகள் பூமியில் நிறைய உண்டு.

ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பை இயங்குவிதியாகக் கொண்டிருந்த அதிசக்தி வாய்ந்த அமெரிக்கப் படைகள் – விடுதலைப் போர்ப்பண்பை அடிநாதமாகக் கொண்டிருந்த வியட்னாம் போராளிகளிடம், அவமானகரமாகத் தோல்விகளைத் தழுவியிருந்தன.

இந்தவகையில், இப்போது, குறுகியகாலப் போரில் சாதக அம்சங்களைக் கொண்ட ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பையுடைய – சிறிலங்காப் படைகளும் – நீண்டகாலப் போரின் – சாதக அம்சங்களைக் கொண்ட – விடுதலைப் போர்ப்பண்பையுடைய – புலிப்படையும் மிக உக்கிரமாகப் போரை நடாத்துகின்றன. போர் தொடர்ந்து நடைபெறத்தான் போகின்றது. புலிகளின் கை ஓங்கத்தான் போகின்றது. சிங்களப் படை சோர்வடைந்து – தமிழர் தாயகத்தை விட்டு வெளியேற்றப்படத்தான் போகின்றது. ✳

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நெஞ்சை நிறைக்கும் நினைவுக் கனல்கள்

**லெப். கேணல் நாதன், கப்டன். கஜனின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி இக்கட்டுரையை பிரசுரிக்கின்றோம்.**

## நாதன் அண்ணன்!

இன்றுபோலவே அந்நாட்கள் இன்னும் நினைவிருக்கிறது. 1985ஆம் ஆண்டு சித்திரை மாதம், இந்த இளைஞர் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளராக எனக்கு அறிமுகமானார். உற்சாகமான – உறுதியான – எளிமையான, மனங்களை வெல்லும் மனத்தைக் கொண்ட இந்த இளைஞர் என்னைக் கவர்ந்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை. அன்றிலிருந்து இவர் வீரச்சாவடைகின்ற வரையும் எங்களது உறவு இறுக்கமடைந்து கொண்டே வந்தது.

ஆண்டுகள் போகப் போக, பலமடங்கு சிந்தனையில் ஆழத்தையும் – நெருக்கடியான சூழ்நிலைகளை அலாதியாகக் கையாளும் திறமையையும் – எப்போதுமே சோர்வடையாத உற்சாகத்தையும் இவரில் கண்டேன். இவர் நிற்கின்ற இடம் கலகலப்பாக – சுறுசுறுப்பாக இருக்கும். ஒவ்வொரு நாட்டுக் கிளையிலும் உள்ள கவனமாக இருப்பார்.

பட்டப் படிப்புக்களும், பெயரை அலங்கரிக்கின்ற அதன் அணிகலன்களும் இவரிடம் இல்லாதுவிட்டாலும் பன்னிரண்டு ஆண்டுகால நீண்ட விடுதலைப் போராட்ட அனுபவம் இவருக்கு வழங்கியிருந்த பட்டறிவு ஏராளம், ஏராளம். அந்தப் பட்டறிவு இவரை ஆழமான – அழகான பகுத்தறிவாளராக, ஆளுமை உள்ளவராக மாற்றியிருந்தது.

புலம்பெயர்ந்த தேசாபிமானிகளின் பங்களிப்பால் நாட்டில் போராளிகள் வெற்றிகளைச் சந்திக்கும்போது குழந்தை போல் இவரது உள்ளம் குதூகலிக்கும். இன்னும் இன்னும் போராளிகள் வெற்றிகளைச் சந்திப்பதற்கு நாம் காத்திரமாக, விரைவாக செயற்பட வேண்டுமென்பதில் இவருக்கிருந்த துடிப்பு அபூர்வமானது.

சதிகார சிறிலங்கா அரசின் கொலைகாரக் கரங்கள், இவரது மூச்சை நிறுத்துவதற்கு 3 நாட்களுக்கு முன்புகூட எம்மோடு இவர் கூடியிருந்ததும் வழிகாட்டியிருந்ததும் எம்மைத் தேற்றியிருந்ததும், தெம்பை ஏற்றியிருந்ததும் பசித்திருந்ததும் புசித்திருந்ததும் இன்றுபோலவே உள்ளன.



செயற்பாட்டாளர்களை தனிப்பட இவருக்குத் தெரியும். புகலிட வாழ்வின் நெருக்கடிகளினாலும், வேறு காரணங்களினாலும் சோர்வுறும் வேளைகளிலெல்லாம் இவரது சந்திப்புக்காக மனம் ஏங்கும். எந்த இடத்துக்குப் போனாலும் யாராவது ஒருவர் இவருக்கு முன்பே அறிமுகமானவராக இருப்பார்.

கொள்கையில் தெளிவும், கொண்ட இலக்கில் குறியும், சந்திப்பை மேற்கொள்பவர்களுக்கு ஏற்றால்போல கதைக்கும் லாவகமும் – கையாளும் தன்மையும் இவருக்கே உரித்தான தனிப் பண்புகள்.

தான் எடுத்துக் கொண்ட விடயத்தை, போராட்டத்துக்குச் சாதகமாக முடிக்காமல் இவருக்கு இருப்புக் கொள்ளாது. இவரோடு சேர்ந்து பயணிக்கின்ற வேளைகளிலெல்லாம் பல்வேறு விடயங்களைப் பற்றியும் பேசிக்கொண்டே வருவார். எம்மையும் விடுதலைப் போராட்ட சிந்தனைகளில் ஆழ, அகலப்படுத்த வேண்டுமென்பதில்

நாதனண்ணா!
எமக்குத் தெரியும்
உங்கள் உடல் மட்டும் தான்
அந்தக் குழியில் நீள்உறக்கம் கொள்ளுமென்று
உங்கள் ஆத்மா.........?
அது காலையில் வேளைக்கே துயிலெழும்
செய்ய வேண்டியதைக் குறிப்பெடுக்கும்.
தொய்வற்று ஓடித் திரியும்
இயங்கும் - இயக்கும்
மனங்களை வெல்லும்
எம்மை வழி நடத்தும்
நமது தேசம்
சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் வரை........!

## விதையாகி வீழ்ந்தார்கள் விளைவார்கள்

இருதோழர் உடல் சுமந்து நடந்தோம்
எம்விழியோரம் நீர் சுரக்கத் துவண்டோம்.
புகழாரம் தந்தவரை வியந்தோம் – அவர்
தாங்கிநின்ற பணியதனை சுமந்தோம்! நிமிர்ந்தோம்!

ஊட்டிய அமுதூற்றில் உடல்வாங்கி
அவள்தந்த உயிர்மூச்சில் உணர்வேந்தி
தாய்நில நினைவோடு மெழுகாகி – எங்கள்
இருதோழர் போனார்கள் புலியாகி.

கடல்தாண்டி வந்தும் நீர்தேடி – தமிழர்
கரைதாண்ட தினந்தோறும் போராடி
பனிவிழும் நாட்டில் தீமலர்கள் – மலர்ந்து
விதையாகி வீழ்ந்தார்கள் விளைவார்கள்.

– ஜெயா (பிரான்ஸ்)

## கஜன்!

கிட்டண்ணா லண்டனிலிருந்த காலப்பகுதியில்தான் கஜனுக்கும் எனக்குமான அறிமுகம் ஏற்பட்டது. அமைப்பின் செயற்பாடுகளில் ஒன்றிணைந்து செயற்பட்டதால் ஏற்பட்ட அறிமுகம் நாளடைவில் நல்ல நட்பாக நெருக்கமடைந்தது. அன்றிலிருந்து எமது கிளையின் சிறப்பான செயற்திட்டங்களில் பங்கெடுக்குமாறு அறிவித்தால் தனக்கு இருக்கின்ற அத்தனை வேலைப் பழுவினூடும் வந்து எம்முடன் நின்று எம்மை உற்சாகப்படுத்திச் சென்றதை இன்னும் மனம் அசை போடுகின்றது.

நல்லவன் – வல்லபன். ஒளிவு மறைவின்றி உள்ளதை உள்ளபடி சொல்பவன். கலை – இலக்கியங்களை ஆழ நேசித்தவன். கிட்டண்ணாவின் வீரச்சாவினை அடுத்து அவன் எழுதிய "ஒரு தீ தன்னைத் தானே தீ மூட்டிக் கொண்டது", "கனக்கின்ற நெஞ்சில் கனலை வளர்ப்போம்" போன்றவை என் நெஞ்சை நிறைத்த இவனது கவிதைகள்.

புலம் பெயர்ந்து வாழும் நமது சமுதாயத்தின் மேம்பாட்டுக்காகவும், அவர்களை நியாயமான எமது போராட்டத்தின்பால் ஈர்க்க வேண்டுமென்ற ஆழமான நம்பிக்கையினாலும் ஈழமுரசு பத்திரிகையை ஆரம்பித்து அதன் வளர்ச்சியில் இவன் அனுபவித்த கஸ்ரங்களை அருகிருந்து நாம் எண்ணிப் பார்க்கின்றோம்.

பலதரப்பட்ட, பல்வேறுபட்ட அபிப்பிராயங்களை உடையவர்களையும் நாம் அனுக வேண்டும் – கலந்துரையாட வேண்டும் – காத்திரமாகச் செய்ய வேண்டுமென்று இவன் சிந்தித்ததும் செயற்பட்டதும் சிந்தையை நிறைக்கிறது. கிராமியக் கலைகளில் இவனுக்கிருந்த பிடிப்பும், ஈடுபாடும் அலாதியானது. புலம்பெயர் வாழ்வின் யதார்த்தங்களை – அவலங்களை – அனுபவங்களைத் துல்லியமாக, செயற்கைத்தனங்களற்று, வக்கிர சினிமாத் தனங்களற்று படமாக்க வேண்டுமென்பதும் இவனது நீண்ட நாளைய கனவாக இருந்தது. இந்த நேசிப்புத்தான், இவனை அபிநயனாக மாற்றியிருந்தது. உள்ளதை உள்ளபடி இவனை எழுதத் தூண்டியது. ஆரோக்கியமான, பண்பட்ட, சலிப்பைத் தராத திரைப்படங்களை நம்மவர்கள் தரவேண்டுமென்பதே இவனது எதிர்பார்ப்பாக இருந்தது.

30 வயதில் இவன் சாதித்தவை ஏராளம்
கஜன் .......!
உன் நினைவுகளாலும்
இதயம் நிறைந்திருக்கின்றது
இதில் இறுதித் துடிப்பிருக்கும் வரைக்கும்
உன் நினைவிருக்கும்
வா! மீண்டும் மீண்டும் வா!
ஈழமுரசாய், பாலமாய்

**இவர்கள் இருவருக்கும் புலம்பெயர்ந்து வாழுகின்ற எங்கள் அத்தனை பேருக்கும் இருந்த – இருக்கின்ற வாய்ப்புக்களும், வசதிகளும் தாராளம். இருந்தும் இந்நாடுகளில் கிடைக்கக்கூடிய தற்காலிக சுகங்களை, தமது சுயங்களைத் துறந்து அல்லல்படுகின்ற எம் மக்களுக்காய் அல்லும் பகலும் உழைத்தவர்கள்.**

**ஆயிரமாயிரம் கனவுகளோடு வாழ்ந்தவர்கள். அந்தக் கனவுகளை ஒவ்வொன்றாய் எம் நெஞ்சில் சுமப்போம்.**

அனுபவித்திருக்கின்றோம். பத்திரிகையை வாரமொருமுறை வெளிக் கொணர்வதோடு, இவன் பணி முடிந்துவிடவில்லை. அதனைக் காவிச் சென்று அந்தந்த நாடுகளுக்குச் சேர்ப்பவனாகவும் தன் உடலை வருத்தி, உரிய சாப்பாடின்றி, நித்திரையின்றி ஈழமுரசின் வளர்ச்சிக்காய் மனஉறுதியோடு இவன் இயங்கியதை

உன் கவிதைகளாய்.....
கட்டுரையாய், விமர்சனமாய்
வா! மீண்டும் மீண்டும் ........ வா!!

இவர்கள் நினைவுத்தீ எம் நெஞ்சை நிறைக்க, கஜனின் கவிதைபோல், 'கனக்கின்ற நெஞ்சில் கனலை வளர்ப்போம்'

www.tamilarangam.net

# லெப். கேணல் நாதன், கப்டன் கஜன்

## நண்பர்கள் நினைவில் ஓராண்டு

26-10-97உடன் ஓராண்டு ஓடிக் கழிந்து விட்டது!

எமது ஆருயிர் நண்பர்கள் லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோர் எம்மை விட்டுப்பிரிந்து...... இல்லை எம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு பன்னிரு மாதங்கள் ஓடிக்கழிந்து விட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச நிதிப் பொறுப்பாளராக இருந்து, நாதன் ஆற்றிய பணிகளும், "ஈழமுரசு" பத்திரிகையின் ஆசிரியராக இருந்து கஜன் ஆற்றிய பணிகளும், எமது நெஞ்சப் பசுமையில் ஆழமாகப் பதிந்திருந்து அவர்கள் நினைவை – அவர்கள் இழப்பை எமக்கு நாளாந்தம் நினைவூட்டிக் கொண்டுதான் உள்ளன.

இப்போது நினைத்துப் பார்க்கவும் எமது நெஞ்சம் நடுங்குகின்றது!

கொடியவரின் துப்பாக்கிக் குண்டைத் தமது தலையில் தாங்கி, வீழ்ந்து விட்ட எமது நண்பர்கள் மரணப்படுக்கையில் படுத்திருந்த காட்சியினை மனக்கண்ணில் கொண்டு வரும் போது இப்போதும் நெஞ்சம் நடுங்குகின்றது.

மாவீரர் வணக்கப் பாடல் இசைக்க, இவ்விரு மாவீரர்களிற்கும் பாரிஸ் மயானத்தில் மண் அள்ளித் தூவி அகன்ற அக்காட்சியினை இன்று நினைக்கவும் நெஞ்சம் பதறுகிறது... நெஞ்சம் விம்முகின்றது.

ஓராண்டு ஓடி முடித்து விடுகிற நிலையிலும், இப்பாதகக் கொடுஞ் செயலைப் புரிந்தவர்கள் நீதியின் கரங்களில் இன்னும் சிக்கிவிடாத நிலையினை எண்ணி மனம் துவளுகின்றது.

எமது நண்பர்கள் ஏன் எம்மிடமிருந்து பிரிக்கப்பட்டனர்? எவரது ஆணையின் பேரில் இது நடந்தது?

'ஒப்ரேசன் பீனிக்ஸ்' என்ற பெயரில், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பலம் சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் முக்கியஸ்தர்களைத் தீர்த்துக் கட்டுவதற்காக சிறிலங்கா அரசால் வகுக்கப்பட்டிருந்த திட்டம் கொழும்பில் இருந்து வெளியாகும் "The Sunday Times" பத்திரிகையில் வெளியாகியிருந்ததே! அதனை மையமாகக் கொண்டு விசாரணைகள் துரித கதியில் நடாத்தப்பட்டிருந்தால் கொலைஞர்கள் நீதியின் கரங்களில் சிக்கியிருக்கக்கூடும்.

எமது நண்பர்களைப் படுகொலை செய்த கொலைஞர்கள் எவராயிருந்தாலும் நீதியின் கரங்களில் சிக்கியிருக்கக் கூடுமே!

### லெப்.கேணல் நாதன்!

பேரின்பநாதன் – இது இவனுக்கு இவன் பெற்றோர் இட்ட பெயர். ஒன்பது சகோதரர்களுக்கு இவன் கடைக்குட்டி. என்றுமே சிரித்த முகத்துடன் தனது கடமையை ஆற்றி வந்தவன். 1984 முதல் பாரிஸ் மண்ணில் கொடியவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீழும் வரை பன்னிரு வருடங்கள் தன்னை விடுதலைப் போராட்டத்திற்கு முழுமையாக அர்ப்பணித்தவன். விடுதலைப் போராட்டம் பலம் பெற – எமது மண்ணில் வேரூன்றி நின்று உரிமைப் போர் புரிந்து வரும் எமது போராளிகளும் மக்களும் பலம் பெற – அனைத்துலக நாடுகள் எங்கும் நிதிப்பலம் தேடி அலைந்தவன். எம்மவர்களுக்குத் தேவைப்படும் பொருட்களை எங்கு பெறலாம், தரமானவற்றை குறைந்த விலையில் எவ்வாறு பெறலாம் என்பதனை தனது சிந்தையில் கொண்டு நாளும் பொழுதும் அலைந்தவன். போராட்டத்திற்கான நிதிப்பலம் தேடி இவன் செல்லாத நாடுகள் இல்லையெனலாம். உரிய நேரத்தில் உரிய தொகையினைத் திரட்டி எடுப்பது நிதி திரட்டும் பணியில் முக்கியமான ஒன்று. இவன் எப்படியாயினும், எவ்வளவு கஷ்டப்பட்டாயினும் அவனுடன் இவ்விடயத்தில் பணிபுரிந்த நண்பர்களை ஊக்கப்படுத்தி – உற்சாகப்படுத்தி தேவையான தொகையினைத் திரட்டி விடுவான்.

தனக்குத் தலைமைப்பீடத்தால் தரப்படும் பணிகளை மிக வேகத்துடனும், உற்சாகத்துடனும் செய்வது இவனது குணாம்சம். தனது பணியினை முடித்துவிட்டு உற்சாகத்துடன் திரும்பும் போது இவன் உதட்டில் இருக்கும் சிரிப்பிருக்கிறதே – அது ஒரு தனி அழகு.

> **நிதிசேகரிப்பு, பரந்துரை போன்ற முக்கிய சர்வதேசப் பணிகளில் ஈடுபட்டிருந்த இம்முக்கிய பொறுப்பாளர்கள் கொலையுண்டமை, எமது இயக்கத்திற்கு மட்டுமின்றி எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் ஏற்பட்ட பாரிய இழப்பாகும்.**
>
> **– தமிழீழத் தேசியத் தலைவர்**

தன்னுடன் கூட செயற்பட்ட நண்பர்களை ஊக்கப்படுத்துவதாகட்டும், அவர்களுடையை இன்ப, துன்பங்களில் பங்கு கொள்வதாகட்டும், அவன் ஒரு குடும்ப உறுப்பினன். சில விடயங்களில் அவன் நண்பன். சில விடயங்களைக் கையாள்வதில் அவன் அன்னை. சிலவற்றிற்கு அவன் தந்தை. அரவணைக்க வேண்டிய நேரங்களில் அரவணைத்து, கண்டிக்க வேண்டிய நேரங்களில் கண்டித்து வழிநடத்துவான். மற்றவர்களை வழிநடாத்தும் இவன், தனது குறைகளைச் சுட்டிக்காட்டுமாறும் தனது நண்பர்களிடம் வேண்டிக் கொள்வான்.



நாதனின் போராட்டப் பணியினை விவரிப்பது ஒரு பெரும் பணி. 12 வருடங்களாக சர்வதேச அரங்கில் அவன் புரிந்த பணியினை மதிப்பீடு செய்த தேசியத் தலைவர் அவனை லெப். கேணல் எனப் பிரகடனப்படுத்தியமையே – அவன் ஆற்றிய பணிகளை என்றும் எடுத்தியம்பும்.

### கப்டன் கஜன்!

கண்முன்னால் அருமையுடன் வளர்ந்த ஒரு பத்திரிகையாளன் – கவிஞன். 1987இல் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக் கிளையுடன் இணைந்து விடுதலைப் பணி ஆற்றி வந்தவன்.

இவன் பல்வேறு வகையான செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்த போதும், கலை, பண்பாடு சார்ந்த துறையிலும், எழுத்துத் துறையிலும், நிதிசேகரிப்புத் துறையிலும் இவன் குறிப்பிட்டுக் கூறும்படியான செயலாற்றலைக் கொண்டிருந்தான். இதனால் இவனுக்கு இயக்கத்தால் வழங்கப்பட்ட பணிகள் கூடுதலாக இத்துறைகள் சார்ந்தே இருந்தன. இவனது பணிகளில் 1995ம் ஆண்டு ஜனவரி மாதம் – இவனது முன்முனைப்பால் உருவாக்கப்பட்ட 'ஈழமுரசு' நிறுவனம் மிக முக்கியமானது. அந்நிறுவனம் உருவாக்கப்பட்டதிலிருந்து – துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி வீழும் வரை பத்திரிகை ஆசிரியர் பொறுப்பிலிருந்து இவன் ஆற்றிய

## நாதன் - கஜன் நினைவு வணக்கம் - 1997

### தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப் பணியகம் விடுத்துள்ள நினைவு வணக்க செய்தி

**1996ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ம் திகதி பாரிஸ் நகர வீதியொன்றில் வைத்து சிங்கள இனவாத இயந்திரத்தின் கைக்கூலிகளால் படுகொலை செய்யப்பட்ட எமது மாவீரர்களான லெப். கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோருக்கு முதலாண்டு நினைவு வணக்கத்தினை செலுத்துகின்றோம்.**

புலம்பெயர்ந்து வாழும் தமிழர் பரப்பெங்கும் ஓடி ஓடி உழைத்த எம் இரு போராளிகளின் இழப்பு எம் விடுதலைப் போரின் முன் வைக்கப்பட்ட தடைக்கல்லாகும். ஆயினும் போராட்டப்பாதை எம் தலைவர் தலைமையில் அனைத்துத் தடைகளையும் உடைத்து இறுதி இலட்சியத்தை வென்றெடுக்கும். அந்தப் போர்ப்பணியை புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தொடர்ந்து நடாத்தி வருகின்றனர். எமது தோழர்கள் எம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு ஆண்டொன்று சென்றிடினும் அவர்கள் நினைவுக் கனல் எம்முள் உயிர்த்து நியாய வைராக்கியத்தையும் வென்றெடுக்க வேண்டும் என்ற உறுதியையும் தந்துள்ளது.

நாம் வெல்வோம். எம் தலைவர் தலைமையில் நாம் எடுத்துச் செல்லும் இலட்சியத்தை வென்றெடுப்போம். நாதனும் கஜனும் வித்திட்ட பாதை வெற்றிக்கு வழி சமைக்கும்.

நீங்கள் கண்ட கனவு நனவாக நாம் தொடர்ந்து உழைப்போம்.

பிரெஞ்சுப் பணியகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
(அக்டோபர் 1997)

www.tamilarangam.net

# ஆகியோரின் முதலாம் ஆண்டு நினைவாக....



ணிகள் சொல்லில் அடங்கா.

ஈழமுரசு பத்திரிகையினை வளர்ப்பதற்கு - பத்திரிகை ஆசிரியர் முதற் கொண்டு பத்திரிகை விநியோகம் செய்யும் செயற்பாடு வரை - ஊன், உறக்கமின்றி இவன் உழைத்த உழைப்பு என்றுமே எமது நெஞ்சிலே நிலைத்து நிற்கும்.

ஆசைத்தம்பி என்ற பெயரில் இவன் எழுதிய "ஆருக்குச் சொல்லி அழ" னும் உத்தி எப்படி நெஞ்சை விட்டு அகலும்?

கஜன் ஒரு நேர்மையான விமர்சகன். முகத்துதி செய்வது அவனுக்கு என்றுமே பிடிக்காது. "ஆளுக்காள் முதுகு சொறியும் விளையாட்டு" வளர்ச்சிக்கு உதவாது என்பதில் அவனுக்கு உறுதியான கருத்து இருந்தது. அதே வேளை பழகுவதற்கு இனிமையானவன். அவன் இருக்கும் இடத்தில் என்றும் கலகலப்புக்கு பஞ்சமிருக்காது. தொலைபேசியாயிருக்கட்டும், நேரவாகட்டும் அவனுடன் மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருந்தாலும் நேரம் போவதே தெரியாது. கஜனின் விமர்சனத்தில் நேர்மை மட்டுமல்ல துணிச்சலும் இருக்கும். தான் சொல்ல வேண்டும் என்று நினைத்ததை எந்தவகை அழுத்தத்திற்கும் பணிந்து போய் அவன் கைவிடுவதில்லை.

26-10-97 அன்று - இவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடந்த அன்று - கஜன் துணிச்சலுடன் செயற்பட்டதாக சேதி ஒன்று காதில் வீழ்ந்தது. நாதனை நோக்கி முதலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும், நாதனின் தலையில் துப்பாக்கிச் சூடுபட்டு நாதன் வீழ்ந்த பின்னர் - சுட்டவனைக் கட்டிப்பிடித்து மடக்க கஜன் முயன்றதாகவும், பாரிஸ் மண்ணில் ஒரு சேதி உலவிற்று. கஜனின் முகத்தில் ஏற்பட்ட உரசல் காயமும் இச்சேதி உண்மையாக இருக்கலாமோ என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

கஜனின் இழப்பு எமது நெஞ்சில் ஏற்படுத்திய ஆழமான வடு நெஞ்சில் நிலைத்திருக்க - அவனது நினைவுகளைச் சுமந்தபடி ஈழமுரசு இன்றும் வெளிவந்து கொண்டு தானிருக்கிறது.



நாதன், கஜன் இருவர்களையும் சுட்டு வீழ்த்தியவர்களின் நோக்கம் தமிழீழ விடுதலைப் போரைப் பலவீனப்படுத்துவதாக இருப்பின் அவர்கள் மீது காறி உமிழ்ந்தவாறு போராட்டத்திற்குத் தேவையான அனைத்துலக செயற்பாடுகள் வேகமுடன் நடந்து கொண்டு தானிருக்கின்றன.

**- திலீபன் -**

**லெப். கேணல் நாதன், கப்டன் கஜன் முதலாண்டு நினைவு வணக்கத்தை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேசச் செயலகம் விடுத்துள்ள செய்தி.**

எமது இயக்கத்தின் முன்னாள் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் லெப். கேணல். நாதனும் கப்டன் கஜேந்திரனும் படுகொலை செய்யப்பட்டு ஒரு வருடமாகின்றது. ஆயினும் கொலையாளிகளின் எதிர்பார்ப்பை முறியடித்து எமது விடுதலைப் போர் தனக்கே உரிய பரிணாம வளர்ச்சிப் போக்கில் சென்று கொண்டிருக்கின்றது. எமது விடுதலைப் போருக்கு சர்வதேச ரீதியாக ஆதரவு திரட்டும் முயற்சிக்கு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்த சிங்கள அரசினாலும் கைக்கூலிகளினாலும் திட்டமிடப்பட்ட இப்படுகொலை நடவடிக்கையின் எதிர்பார்ப்பை முறியடிப்பதில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் வைராக்கியத்துடன் தொடர்ந்து உழைத்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகளை முறியடிப்பதை விட தமிழீழ மக்களின் ஆன்ம பலத்தை முறியடிப்பதிலேயே சிங்கள அரசு கூடிய கவனம் செலுத்துகின்றது. உண்மையில் விடுதலைப் போராட்டத்தின் வெற்றி மக்களின் ஆன்ம பலத்தில்தான் தங்கியுள்ளது. பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக்கள் மற்றும் உடமை இழப்புக்கள் மத்தியிலும் விடுதலைப் போராட்டம் வெற்றியை நோக்கி நகர்வது தமிழ் மக்களின் ஆன்ம பலத்தினால்தான் என்பதை சர்வதேச சமுதாயம் உணர்ந்து கொள்ள வேண்டும்.. இந்த ஆன்ம பலம் எமது விடுதலைத்தீயை அணையாது பாதுகாத்து எமது அரசியல் இலட்சியமான சுதந்திர தமிழீழத் தேசத்தை மீட்டெடுக்க ஆதாரமாய் அமையும். இதுவே நாதனும், கஜனும் எமக்கு விட்டுச் சென்ற புனிதமான பணியாகும். அவர்கள் இலட்சியத்தை ஈடேற்றி வைப்பதே எமது கடமை.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

சர்வதேசச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்

## தவிக்குதே நெஞ்சம்

**நா**தனைக் கஜனை
நல்ல இரு வீரரைக்
காணவில்லை எம்மருகில்

கண்களிலே நீர்பெருகக்
காத்திருந்து காத்திருந்து
பூத்துவிட்டதெம் விழிகள்!

சோதனைகள் வேதனைகள்
சொந்தமாய்த் தமிழரின்
பேரினிலே ஊறியதோ!

சாதனைகள் படைத்த எம்
சத்தியத்தின் தூதரை
கருநரிகள் கண்டதுவோ!

தேடிய சந்தர்ப்பம்
தெருவிலே கிடைத்திடவே
பாவியரின் குண்டுகள்
பாய்ந்தெம் வீரரின்
உயிரைக் குடித்தனவோ!

புலம் பெயர் நிலத்தில்
பனியுதிர் களத்தில்
இளம் புலியிவர் மேனி
குருதியில் குளித்ததே!

தவிக்குதே எம்நெஞ்சம்
தவிக்குதே
தமிழீழ விடிவிற்காய்
உழைத்தவர்
சரிந்ததை நினைக்கையில்
எம் நெஞ்சம் தவிக்குதே

வீரரே விமலரே
நேரிலே செய்தபணி
நிற்குதே எம் கண்ணில்
பாரிலே உம்பணி
தேடியே செய்தினி
தேசியம் காத்திடுவோம்- தமிழ்
தேசியம் காத்திடுவோம்

**- தமிழொளி**

www.tamilarangam.net



# நேற்றிரவு கஜனை சந்தித்தேன்......!



நேற்றிரவு கஜன் என்னிடம் வந்தான். "எப்படி அபி இருக்கிறாய்?" நலம் விசாரித்தான். "பரவாயில்லை" என்றேன். "நான் இல்லாத ஒரு வருசம் எப்பிடிப் போனது?" தொடர்ந்தான். "பெரிதாக மாற்றங்கள் எதையும் கூறுவதற்கில்லை" என்றேன்.

வழமையான தனது புன்முறுவலோடு என்னை நோக்கினான். அதே ஆளுமையான கம்பீரம் – தீட்சண்யமான பார்வை – எதையும் சாதித்துவிடத் துடிக்கின்ற வேகம். அவன் கண்களில் இருந்து எனது கண்களை அகற்றிவிட முயன்றேன்.

"வா அபி ஒரு 'கபே' குடித்துவிட்டு வருவோம்" என்றான். கஜனுக்கும் 'கபே'க்கும் எப்போதும் நெருக்கமான உறவு இருந்து வந்ததை நான் அறிவேன். பல வேளைகளில் உணவு கூட அவனுக்கு 'கபே'யாகவே இருந்திருக்கின்றது. பிரான்ஸ் நாட்டில் பல கவிஞர்கள், அறிஞர்கள், சிந்தனையாளர்களையெல்லாம் உருவாக்கியதில் இந்த 'கபே' விடுதிகளுக்கு பெரும் பங்குண்டு என எங்கோ ஒரு புத்தகத்தில் படித்த ஞாபகம்.

'கஜன் – கபே பார்' மனதுக்குள் உச்சாடனம் செய்து கொண்டேன். ஒரு வருடமாகப் பிரிந்த வாழ்வு, கஜனின் ஆளுமை, ஆற்றல் என்பவை மேலும் அவனிடம் வளப்படுத்தப்பட்டிருந்தமையை நோக்கினேன்.

அரசியல், கலை, இலக்கியம், பொருண்மியம், புகலிட வாழ்வு, நாட்டு நிலைமை என பலதரப்பட்ட விடயங்களைப் பற்றியும் என்னோடு உரையாடினான்.

"நாட்டு நிலைமை எப்படி" என்றான்.

"வன்னியில் 'ஜெயசிக்குறுய்' தடுமாறுது" என்றேன். "ஓ, வெற்றி நிச்சயமா? இராணுவ நிலைகளை எதிர்வு கூற முடியாதுதான். ஆனாலும் இந்திய இராணுவத்தையே வெற்றிகண்ட வன்னிக்களம். வன்னிக் காடுகளெல்லாம் போராளிகளின் தோழனாக நிற்கின்ற களம். இராணுவத்திற்கு தோல்வி நிச்சயமே!" கூறிவிட்டு 'கபே'யை உறிஞ்சி இழுத்தான். சிறிய அமைதிக்குப் பின்........"மக்கள்தான் சரியாக் கஸ்ரப்படுகிறார்கள்" கூறிவிட்டு மீண்டும் அமைதியானான். "வன்னியில் மக்களின் நிலை மிகவும் மோசம்தான்" அமைதியைக் கலைத்தேன்.

"மக்களின் அவலத்தைப் போக்க உடனடியாக, ஏதாவது செய்தாக வேண்டும்" அந்த வார்த்தைகளில் தெறித்த நம்பிக்கையும், உறுதியும் எனக்குள் ஒருவித சிலிர்ப்பை ஏற்படுத்தியது. "அமெரிக்கா, விடுதலைப் புலிகளுக்கு தடைவிதித்துள்ளது, தெரியுமா!" என்றேன். ஆவலோடு அவன் பதிலுக்காய் காத்திருந்தேன்.

என்மீதில் ஒரு அலட்சியப் பார்வையை வீசினான். பின் சிரித்துவிட்டுக் கூறினான். "இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லையே!" அவனையே உற்றுப் பார்த்தேன். "உலகத்தில் நடந்த எந்த விடுதலைப் போராட்டங்களைத்தான் அமெரிக்கா அங்கீகரித்துள்ளது. சுதந்திர நாடான கியூபாவின் தலைவர் பிடல் காஸ்ரோ இன்றுவரைக்கும் அமெரிக்காவுக்கு பயங்கரவாதி. மண்டேலா தொடங்கி அரபாத் வரை எத்தனையோ விடுதலைப் போராட்டத் தலைவர்கள் எல்லாம் அமெரிக்காவின் பயங்கரவாதப் பட்டியலில் இடம்பெற்றவர்கள்தானே"

மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேசையில் வைத்துவிட்டு யோசனையில் ஆழ்ந்தான். பின் தொடர்ந்து, "ஆனாலும் இந்தத் திடீர் தடைக்குப் பின்னால் பல மர்மங்கள் மறைந்திருக்கக் கூடும்" புதிர் போட்டான். "என்ன சொல்கிறாய்" என்றேன். "ஆசியாவில் ஒரு இஸ்ரவேலாக சிறிலங்காவை உருவாக்க அமெரிக்கா முயல்கிறதுபோல" என்றான். நான் குழம்பிப் போனேன். "இந்தத் தடை ஒருவகையில் இந்தியாவுக்கு விடுக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கை" என்றான். "எப்படி" என்றேன். "தென்கொரியா, சீனா, யப்பான், இந்தியா என ஆசிய நாடுகளின் பொருண்மிய வளர்ச்சி அமெரிக்காவை திக்குமுக்காடச் செய்கிறது. தற்போது இந்தியா தொழில்நுட்ப ரீதியிலும் தன்னை மேம்படுத்திச் செல்கிறது. இந்த நிலையை எப்படி அமெரிக்கா பொறுத்துக் கொள்ளும். ஆகவே, ஆசியாவுக்குள் ஒரு பலமான தளம் அமெரிக்காவுக்குத் தேவைப்படுகிறது."

தெளிவான உறுதியான அந்த வார்த்தைகளில் நான் ஈர்ந்து போனேன்.

"சரி அதை விடுவம். எங்கட ஆக்களின் கலை, இலக்கிய முயற்சிகளெல்லாம் எப்படி இருக்கு" விடயத்தை வேறு திசைக்கு மாற்றினான்.

"நீ இல்லாத இந்த இடைவெளியில் புலம்பெயர்ந்த தமிழ்க் கலைஞர்களின் திரைப்பட முயற்சியும் எங்கோ இடம்பெயர்ந்தோ, ஓய்வு நிலையினை அடைந்துவிட்டது" என்றேன்.

"ஏனடாப்பா இந்நிலை நல்லதில்லையோ" என்றான். பின் சிறிது யோசித்துவிட்டுக் கூறினான்.

"எமது பேனாக்கள் குப்பைகளின் வெளிவருதலுக்குத்தான் எதிரியே அன்றி கலைஞர்களின் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு என்றுமே தடையாக இருக்க முடியாது. புலம்பெயர்ந்த கலைஞர்களின் திரைப்பட முயற்சியில் நிலவும் மந்தநிலை ஏன் என்று ஆராய வேண்டும். திரைப்பட சார்புக் கலைஞர்கள் அனைவரையும் அழைத்துக் கலந்துரையாட வேண்டும்" என்று கூறிவிட்டு, மீண்டும் ஒரு 'கபே'க்கு அழைப்பு விடுத்தான். 'புகலிடத் தமிழ் திரைப்படம் – கஜன்' தமிழ் திரைப்பட வரலாற்றில் நிச்சயம் குறிக்கப்பட வேண்டியது. நான் எனக்குள் எண்ணிக் கொண்டேன்.

"எம்மவரின் இலக்கிய முயற்சிகளெல்லாம் எப்படிப் போகிறது" என்றான். "எல்லா நிகழ்ச்சிகளுக்கும் போக வேண்டும். எல்லாவற்றிலிருந்தும் தேட வேண்டும். எங்களுக்கு எதிரிஎன்று யாருமில்லை. எல்லோரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். விடுதலைப் புலிகள் என்பது தற்போது ஒரு தனி இயக்கம் அல்ல. அது ஒரு அரசு. அது ஒரு மக்கள் சக்தி."

கஜன் அடிக்கடி கூறிக்கொள்வதை என்னுள் இரைமீட்டுக் கொண்டேன்.

அண்மையில் ஒரு இலக்கியவாதிகளின் ஒன்றுகூடலுக்கு போயிருந்ததைப் பற்றி அவனிடம் பேசினேன். "ஓ, இலக்கியச் சந்திப்பா? எத்தனையாவது சந்திப்பு" என்றான். "23வது போலும்" என்றேன். "முதலாவது சந்திப்பில் பேசிக் கொண்டவைகளையே இப்பொழுதும் பேசிக் கொண்டிருந்திருப்பார்கள்" என்றான்.

"உண்மைதான். உலக இலக்கியங்கள், மாக்சிசம், கம்யூனிசம், சோசலிசம், பெண் விடுதலை தொடர்ந்து...... தொடர்ந்து.....புலி எதிர்ப்பு"

"புலி எதிர்ப்பா.....?"

"ஆம். இலங்கையில் நடப்பது தேசிய விடுதலைப் போராட்டமே அல்ல. தமிழர் பிரச்சினைக்கு பாட்டாளி மக்கள் புரட்சி மூலமே தீர்வு காண முடியும். அங்கு பாட்டாளிகள் இல்லாவிட்டாலும் பாட்டாளி உணர்வுடையவர்கள் இருப்பார்கள். இன்னும்.....இன்னும்....."

"பாவம் அவர்கள் வேறொரு உலகத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை அவர்கள் போக்குக்கு விட்டுவிட வேண்டியதுதான். அங்கும் ஏதாவது நல்லவை கிடைத்தால் அவற்றை பற்றிக் கொள்ள வேண்டியதுதான்."

தனது பாணியில் சர்வசாதாரணமாகக் கூறினான்.

"ஈழமுரசு வேலைகளெல்லாம் எப்படிப் போகிறதுடாப்பா.....?" தான் நாட்டிய விதை பற்றி ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் கேட்டான்.

ஈழமுரசு – அதுதான் கஜன் என்ற ஆளுமையை வெளியுலகத்திற்கு வெளிப்படுத்திய சாதனம். ஈழமுரசை உருவாக்கி அது வளர்ந்தபோது கஜனும் புதிய பரிமாணத்துடன் வளர்ந்தான். அபாரமான, அசாதாரணமான வளர்ச்சிதான். எப்படி முடிந்தது! இப்போதும் என்னுள் கிளர்ந்து நிற்கும் கேள்வி. ஈழமுரசினால் எவ்வளவோ சாதிக்க முடியும் என்றான். சிலவற்றைச் சாதித்தும் காட்டினான். மானிட நேயம் கொண்டு தனது சுதந்திரச் சிறகினை அகல விரித்து பலரையும் அரவணைத்துக் கொள்ளத் துடித்தான். கஜன் பற்றி என்னுள் எழுந்த சிந்தையிலிருந்து மீள நினைத்தேன்.

"என்ன கேட்டாய்! ஈழமுரசு வேலைகளா?" நான் மீண்டும் சுயநினைவுக்கு வந்தவனாய் கேட்டேன். தொடர்ந்து "வேலைகள் நடக்கிறது. ஆனாலும் உனது அந்த ஆளுமையான இருக்கை இன்னும் வெற்றிடமாகத்தான் இருக்கு" என்றேன்.

"இல்லை. வெற்றிடம் என்பதே எமது விடுதலைப் போராட்டத்தில் இருக்க முடியாது" என்றான் உறுதியாக. நாவில் ஒருவித இறுக்கமும் ஆத்திரமும் தொனித்ததை அவதானித்தேன். சிறிது அமைதிக்குப் பின் மீண்டும் கூறினான்.

"இழப்புக்கள், இன்னும் வீச்சுடனும் மூச்சுடனும் இலக்கை நோக்கிய பயணிப்புக்கு உந்து சக்தியாக அமைய வேண்டும்" என்றான்.

"நேரமாகிறது. இன்றிரவு யேர்மனிக்குப் போகவேண்டும்" என்றான்.

நான் கண்களை விழித்தேன்.

–அபிநயப்பிரியன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாதன், தூணாக நின்ற ஒரு மாவீரன்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச செயற்பாடுகளுக்குத் தூணாக நின்ற ஒரு மாவீரன். புலம்பெயர்ந்த தமிழர் வாழும் பரப்பெங்கும் இயக்கத்தின் செயற்பாடுகளைப் பரவலாக்கி விடுதலைப் போரின் அடிப்படைத் தேவைகளுக்குத் தோள்கொடுத்த போராளி. பன்னிரண்டு ஆண்டுகள் இயக்கத்தின் கால்களாக நின்று ஓடிஓடி உழைத்த மானுடன்.

நாதன் யாழ்ப்பாணம் அரியாலையில் ஓர் நடுத்தர வர்க்க குடும்பத்தில் பிறந்தவன். தாயின் அரவணைப்பில் வாழ்ந்த நாதன் சிங்கள அரச பயங்கரவாதப் புயல் எம் தேசத்தைச் சூறையாடியபோது, தாயாலும் சகோதரர்களாலும் பிரான்சுக்கு அனுப்பப்பட்டவன். அரச பயங்கரவாதப் புயல் தமிழர் மத்தியில் விதைத்துவிட்ட விடுதலைத் தாகம் தமது நாதன் உயிரிருப்பை பாதித்துவிடக் கூடாது என்பதற்காகவோ அல்லது தம் கடைக்குட்டி எங்காவது தப்பிப்பிழைத்து உயிரோடு நிம்மதியாக வாழட்டும் என்ற பேராசையினாலோ அந்தத்தாய் தன் மகனை புலம்பெயர வைத்தாள்.

பிரான்சு நாதனுக்கு நிம்மதியைத் தரவில்லை. தன் இருப்பின் ஆணிவேர்களை மறந்து விட – மறுத்துவிட அவன் தயாராக இல்லை. அகதி வாழ்க்கை, அது தந்த அவலம், சமுதாயத்தின் எதிர்காலம் பற்றிய அக்கறை என்பன அவனைச் சிந்திக்க வைத்தது. சாதாரண தன் சகமனிதனைப்போல பிரான்சில் வாழ்ந்து, உழைத்து அனைத்து அவமானங்களோடும் சமரசம் செய்து கூனிக்குறுகி வெறுமனே உயிர் வாழ்ந்திட அவன் தயாராக இருக்கவில்லை. தன்னை இனங்கண்டு தனக்கு இழைக்கப்படும் அநீதியை இனங்கண்டு போராடத்துடிக்கும் ஒரு மானுடனாக அவன் வாழவே விரும்பினான். அவனது போராளித்துவம் இந்த எண்ண ஓட்டத்தில்தான் பிறப்பெடுத்தது. அவன் தன்னைப் பிரபாகரன் தலைமுறையுடன் இணைத்துக் கொண்ட கருத்துத்தளம் இங்குதான் பிறப்பெடுத்தது.

1985–இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுப் பணியகத்துடன் நாதன் தன்னை இணைத்துக் கொண்டான். இயக்கத்தின் அடிப்படை தேவையான நிதி சேகரிப்புப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டான். இயக்கத்தின் துடிப்பான உறுப்பினனாக அவன் இனங்காணப்பட்டு இருந்தான். போராட்டம் கூர்மையடையத் தொடங்கிய காலகட்டங்கள் அவை போராட்டத்தின் தேவைகள் மலைபோலக் குவிந்திருக்க நாதன் இறக்கைகட்டி எம் மக்கள் வாழும் வீடுகள் தோறும் நிதி சேகரித்தான். பன்னிரண்டு ஆண்டுகளின் பிற்பாடும் எங்கள் நாதனிடம் அதே துடிப்பும் அதே ஆர்வமும் கொஞ்சமும் குறையாது நிலைத்திருந்தது.

போர்ப்பயணம் அவனைச் செழுமைப்படுத்தியது. கால ஓட்டத்தில் பிரெஞ்சுப்பணியகத்தின் நிதிசேகரிப்புப் பணிக்கு முழுமையான பொறுப்பாளனாக அவன் நியமிக்கப்பட்டான். இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் அவன் செயற்பாட்டுப்பரப்பு சர்வதேச ரீதியா விஸ்தரிக்கப்பட்டது. பல்வேறு நாடுகளிலும் நடாத்தப்பட்டு வந்த நிதி சேகரிப்பு நடவடிக்கைகளை வழிகாட்டவும், ஊக்குவிக்கவும், மேற்பார்வை செய்யவும் வேண்டிய பொறுப்பு நாதனிடம் எமக்குப் பொறுப்பான அண்ணரினால் கொடுக்கப்பட்டது. அவன் சென்ற நாடெங்கும் "வெற்றிகளை" குவித்தான். அவன் கோட்பாடுகள் பேசி நிதி சேகரிப்பவன் அல்ல. அவன் யதார்த்தத்தைச் சொல்லி "காசு" கேட்பவன். "விமானம் குண்டு போட்டால் எமக்கு விமான எதிர்ப்புபடை தேவை, கடலால் அழித்தால் கடற்புலிகள் பலப்படுத்தப்பட வேண்டும் என நடைமுறைப்பிரச்சினைகளையும் தீர்வுகளையும் விளக்கி நிதி சேகரிப்பவன் நாதன்.

புலம் பெயர்ந்து வாழும் மக்கள் போர்ச் சூழலில் இருந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வேறுபட்ட கலாச்சார பொருளாதார வாழ்க்கை அமைப்பில் உயிர் வாழ்வதால் போர்க்குணமும் விழிப்புணர்வும் இங்கே கேள்விக்குறியாக்கப்படுகின்றன. சிங்கள அடக்கு முறைகளிலிருந்து தன் இனத்தின் வாழ்வினை மீட்டு எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற தர்மாவேசம் புலம் பெயர்ந்த மண்ணின் பொருளாதார கலாச்சார சூழ்நிலையில் மழுங்கடிக்கபட்டு வந்தன. இப்பிரச்சினையை கோட்பாட்டு ரீதியாக எதிர்நோக்கும் எமது இயக்க உறுப்பினர்கள் உள்ளனர். நடைமுறை உதாரணங்களூடாக மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கருத்துக் கொண்டோரும் உள்ளனர். நாதன் நடைமுறை வாதி. நடக்கும் விடயங்களை எடுத்துக் கையாள்வான். அதற்காகப் போராடுமாறு தூண்டுவான். போராட்டத்தில் நிதி என்பது நாடித்துடிப்புப் போன்றது என வலியுறுத்தவான்.

அவனது துடிப்பும், ஆர்வமும் பல இள உறுப்பினர்களை உற்சாகப்படுத்தியது. நாதன் பாணியில் நிதி சேகரிப்பது என்பது இன்று நாம் எம் இளம் உறுப்பினர்களிடம் சொல்லிவரும் முன்னுதாரணமாகும்.

அனைத்துலகச் செயலகத்தின் நிதிப் பொறுப்பாளராக இயக்கத்தின் தலைமைப்பீடத்தினால் நியமிக்கப்பட்ட நாதன் இயக்கத்திற்கு என்ற சுயமான பொருளாதாரத் திட்டங்களை பல்வேறு முனைகளூடாக முன்னெடுத்தான். இப்பணியில் அவன் பல்வேறு விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் எதிர்கொண்ட போதும் ஈற்றிலே தான் வித்திட்ட திட்டங்களில் இருந்து இயக்கத்திற்கு கனி பறித்துக் கொடுத்தான்.

நாதன் தன் வாழ்நாள் பூராவும் உணர்வு பூர்வமான மனிதனாக வாழ்ந்தான். இலகுவாக உணர்ச்சிவசப்படவும் அதே வேளை அதனை இலகுவாக மறந்துவிடவும் அவனால் முடியும். எமது செயல்திட்டங்களின் வெற்றிகளை அனைவரிலும் அதிகமாக குதூகலத்துடன் கொண்டாடும் நாதன் அதேபோல் தோல்விகளை அதிகமான வேதனையுடன அனுஷ்டிப்பான்.

அவனது சிறப்பு அவன் தன் சக உறுப்பினர்கள் மேல் வைத்திருந்த பாசமும் அக்கறையுமாகும். புலம்பெயர்ந்த மண்ணில் இயக்கப்பணிக்காக எம்மோடும் இணையும் பலர் பல்வேறு காரணங்களால் இடைக்காலங்களில் தம் சொந்த வாழ்விற்கு திரும்பி விடுவர். இதேவேளை இயக்கத்தில் தொடர்ந்து இயங்கும் உறுப்பினர்கள் இயக்க செயற்பாடுகளின் விரிவாக்கம் காரணமாக பல்வேறு பிரிவுகளுக்கும் சென்றுவிட புதிய இளம் உறுப்பினர்களை இணைத்து பயிற்றுவித்தல் வழிநடாத்தல் என்பன எமது அமைப்பிற்கு ஒரு தொடர்ச்சியான சுமையாக இருந்து வந்தது. அந்தப் புதிய உறுப்பினர்களை உற்சாகப்படுத்தவும் வழிகாட்டவும் அவர்களுக்கு மூத்த கரங்கள் பல தேவைப்பட்டன. இதனை வழங்குவதற்கு நாதன் எப்போதும் தயாராக இருந்தான்.

நிதி சேகரிப்பு என்பது இயக்கத்தின் கடினமான அத்தியாவசியமான அதேவேளை மக்கள் மயப்படுத்தும் ஒரு அரசியல் பணி. பலபேருக்கு மக்களிடம் நிதி சேகரித்தல் என்பது வெறுமனே நிதிசேகரித்தல் என்பதுடன் நின்றுவிடும். ஆனால், சிலருக்கு அவ் நிதி களத்தில் நிற்கும் எம் போராளிகளின் கைகளில் "தவழும்" வரை பூர்த்தியடையாது. அந்த சிலரில் எங்களது நாதனும் ஒருவனாயிருந்தான்.

பன்னிரண்டு கால தன் போராட்ட வாழ்வில் அவன் கடும் உழைப்பு என்பதற்கு உதாரணமாக விளங்கினான். எடுத்த பணி முடிக்கும் வரை அவன் வேறு விடயங்கள் பற்றி சிந்திப்பது கிடையாது. அப்பணி வெற்றிகரமாகப் பூர்த்தியடையின் அன்று அவனது இயல்பான குழந்தைத் தனம் கூத்தாடும்.

நாதனின் வழிகாட்டலில் இயக்கத்தின் பல்வேறு சர்வதேச திட்டங்கள் வேர்விட்ட காலத்தில் அவன் படுகொலை செய்யப்பட்டது, எமது விடுதலைப் போரின் முன் வைக்கப்பட்ட பாரிய சவாலாகும். அவனது செயற்பாட்டுப்பரப்பும் அதன் வீச்சும் எமது விடுதலைப் போரை சர்வதேச ரீதியாக உந்தித் தள்ளுகையில் அதனால் அச்சமுற்ற எதிரிகள் நடத்தி முடித்த படுகொலை நாதனை உடலால் எம்மிடமிருந்து பிரித்து உணர்வால் எம்மோடு சங்கமிக்க வைத்து விட்டது.

ஒரு விடுதலைத் தாகம் கொண்டு எமது இயக்கத்தின் முழு நேர உறுப்பினராகத் தன்னை இணைத்துக் கொண்ட நாதன் தலைவரின் வழிகாட்டலில் ஒரு முழுமையான போராளியாக செழுமை பெற்று, அந்தப்போர் பயணத்தில் தன்னை உடலால் இழந்துவிட்டான்..

அவன் ஏற்றிவைத்த தியாகத்தீ, புலம்பெயர்ந்து வாழும் எம் மக்களை அவர்களது எதிர்காலத்துக்கும் சுபீட்சத்துக்குமான விடுதலைப் போரில் பூரணமாக இணைத்து, விடுதலை என்னும் எம் மக்களின் ஆதர்சன இலட்சியத்தை வெற்றிக்கு இட்டுச்செல்லும்.

# கஜன் , ஒரு முற்போக்குக் கவிஞன்

1988ஆம் ஆண்டு இந்திய இராணுவம் எமது மண்ணில் "அமைதி" பணிபுரிந்த காலகட்டம்;

சிங்கள இனவாத அரசு குதூகலிக்க பாரதம் எம்மீது போர் தொடுத்த காலங்கள் அவை;

அப்போது எமது மக்களின் இந்திய எதிர்பார்ப்புகள் மெல்ல மெல்ல நொருங்கி தமிழர்கள் தம் சொந்தக் கால்களில் நின்றே விடுதலையை வென்றெடுக்க வேண்டுமென்ற புவிசார் அரசியற் கோட்பாடுகள் புலப்படத்தொடங்கிய நேரம்.

அவ்வேளையில் எமது விடுதலை இயக்கத்தின் பிரெஞ்சுப் பணியகம் 'விடுதலைமாலை' எனும் விடுதலை உணர்வுமிக்க கலைவிழாவை மக்கள் மத்தியில் அரங்கேற்றியது. அவ்விழாவில் மக்களின் சமகாலக்கேள்விகளையும், சந்தேகங்களையும் உள்வாங்கி, இலக்கியமென்பது நிகழ்வுகளின் பிரதிபலிப்பு என்ற கோட்பாட்டுடன் மேடையேறியது 'இவனா நண்பன்' என்ற மண்மணம் கமழ்ந்த நாட்டுக்கூத்து.

இதில் எமது மேடைகளுக்கு முற்றிலும் புதிதான இளைஞர்கள் பங்கேற்றுக்கொண்டனர். இவர்களுள் ஒருவனாக உள்வந்த ஒரு கவிஞன், அன்றுமுதல் தன்னை தன்தேசத்தின் விடுதலைச் செயற்பாட்டுடன் இணைத்துக்கொண்டான்.

ஆம், நாம் – எமது இயக்கம் – கவிஞனாகவே கஜனை இயக்கத்தினுள் உள்வாங்கியது. இலக்கிய சிந்தனை, விடுதலைத் தாகம், சமூகப் பொறுப்புணர்வுமிக்க ஒரு முற்போக்குக் கவிஞனாகவே எம் இயக்கம் கஜனை உள்வாங்கியது.

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிராமத்தில் ஒரு நடுத்தரவர்க்க உழைப்பாளர் குடும்பத்தின் தலைமகனாகப் பிறந்த கஜன் யாழ் இந்துக்கல்லூரியில் உயர்தர வகுப்புவரை கல்வி பயின்றவன். இனவாதப்புயல் எம் தேசத்தின் வேலிகளை பிய்த்தெறிந்தபோது பெற்றோரின் எதிர்பார்ப்புகளுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும் என்ற மரபு ரீதியான சமூக நியதியினால் பலாத்காரப்படுத்தப்பட்டு மேற்கு நோக்கி தூக்கி வீசப்பட்டான். தன் தம்பிமார், தங்கையை மனப்பூர்வமாக நேசித்த அவன் தன் இளமைப் பொழுதுகளை பாரிஸின் கூலித்தொழில் வட்டதினிடையே கழிக்கவேண்டியதாயிற்று. குடும்பம் மீது பாசம் கொண்ட கஜேந்திரனால் வெறுமனே மௌனமாக இருக்கமுடிந்தாலும் அவனுள் வாழ்ந்த கஜன் எனும் போராளியினால் வாய்மூடி மௌனியாகக் கொடுமைகளைச் சகித்து வாழமுடியவில்லை.

தன் குடும்பப் பொறுப்பைக் கவனித்தவாறே கஜன் தன் பேனாவினால் அடக்குமுறை மீது போர் தொடுத்தான். இயக்கத்தின் கலை, பண்பாட்டுப் பிரிவிற்காக 'கலாச்சாரம்' என்ற பத்திரிகையை உருவாக்கி அதன் ஆசிரியனாகவும் சில காலம் பங்கேற்றான். கஜன் தன் அனுபவங்களைச் சரியான கோணத்தினுள் உள்வாங்கி, அதனைத் தன் எண்ணங்களால் செழுமைப்படுத்தி, அவற்றினைத் தன் பேனாவினுள் நிரப்பி சமூகத்தின் விழிப்புணர்வுக்கான ஆயுதமாக்கினான். கலாச்சாரம் இதழில் அவன் பெற்ற அனுபவம் பிற்காலத்தில் அவனால் ஈழமுரசு எனும் வார இதழை உருவாக்க உதவியது.

இரு ஆண்டுகளுக்கு மேலாக எமது இயக்கத்தின் பகுதி நேரத் தொண்டனாக இயங்கிய கஜன் இயக்கத்தேவைகள் அதிகரித்தபோது தன்னை முழுமையான விடுதலைப்புலி உறுப்பினராக இணைத்துக் கொண்டான். இயக்கத்தின் மூத்த தளபதி கிட்டண்ணா எமது இலண்டன் காரியாலயத்தை மையமாக வைத்து சர்வதேச ரீதியாகச் செயற்படத் தொடங்கியபோது அவருக்கு உதவியாக இயங்குவதற்கு எனப் பிரெஞ்சுப் பணியகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் கஜன். கிட்டண்ணாவின் ஆளுமைமிக்க வழிகாட்டல் – அனுபவம் நிறைந்த அறிவுரைகள் – சிந்தனை மிக்க செயற்பாடுகள் என்பன அவருடன் முழுமையாகப் பணிபுரிந்த தோழர்களைச் செழுமைப்படுத்தி நெறிப்படுத்தியது. கஜன், கிட்டண்ணாவின் புலம்பெயர்வாழ்வில் அதிக காலம் அவருடன் வாழ்ந்த இயக்க உறுப்பினன்; கிட்டண்ணாவிடம் 'பேச்சுவாங்கி' வளர்ந்தவன் கஜன். அவனது பிற்காலச் செயற்பாடுகளில் இந்த அடையாளங்கள் பல்வேறு பரிமாணங்களில் வெளிப்படுத்தப்பட்டு வந்தது.

ஈழமுரசு வார இதழை உருவாக்கி அதனை புலம்பெயர் வாழ் மக்களின் தகவல் தொடர்பு மற்றும் கலை, பண்பாட்டு ஊடகமாக உருமாற்றிய கஜனின் எழுத்தாற்றல் இயக்கத்தின் உத்தியோகபூர்வ ஏடான களத்தில், மற்றும் எரிமலை மாத இதழில் வெளிப்பட்டுவந்தது. இயக்கக் கலை, பண்பாட்டுப் பிரிவினரால் வெளியிடப்பட்ட "ஜீவகானங்கள்" மற்றும் "ஜீவராகங்கள்" ஒலிப்பதிவு நாடாக்களில் அவன் பதித்த கவிதை அடிகள் பலதுறைப் பரிமாணங்களைத் தொட்டு நின்றது. அவன் மக்கள் போர் பற்றி பரணிபாடினான். "கண்ணோடு ஒரு கனவு" என அவன் எழுதிய பாடல் அவன் கவித்துவத்திற்கு சான்றாக அமைந்தது.

கஜன் மக்கள் மொழி புரிந்தவன். சிரிக்கச் சிரிக்க அவனால் கதை சொல்ல முடியும். தன்னோடு இருக்கும் நண்பர்களை உற்சாகப்படுத்தவும் அவர்களுடைய ஆற்றல்களை வெளிக்கொணரவும் அவனால் முடியும். அவனோடு பழகாமல் அவனை மேலோட்டமாகப் பார்த்தவர்கள் அவனைப் புரிந்து கொள்ளச் சிரமப்படுவர். ஏனெனில், அவன் மிகுந்த பிரயத்தனம் செய்து தனக்குத் தானே அமைத்து வைத்திருந்த ஒரு தனிமைத்தோற்றம் அப்படியாய் இருந்தது. ஆனால், அப்பிரமையை ஒரு புதிய இயக்க உறுப்பினரால் கூட இலகுவாக உடைத்துவிட முடியும். அதனைத் தடுக்கும் ஆற்றல் கஜனிடம் இல்லை. ஏனெனில், தோழமை உணர்வு என்பது அவனால் எதிர்த்து நிற்கமுடியாத ஆயுதம்.

உண்மையான போலித்தனம் அற்ற கவிஞனாக வாழ்ந்து வந்தவன் அவன். அவன் எழுதி வந்த கவிதைகள் அவன் இறப்பால் எமக்கு உருவாக்கிய இடைவெளியை நிரவிவிடும். கஜன் என்ற போராளி எம் தேசத்தின் உயர்விற்காக உலக வரலாறு இருக்கும் வரை பரணிபாடுவான்.

–நடராஜா–

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சிறுகதை

ஐம்பத்திநாலு வயதுக் கிழவனுக்கும் இருபத்திநாலு வயது இளைஞனுக்கும் நடுவே என்ன சிநேகிதம் இருக்கப் போகிறது. இப்படித்தான் யாராவது நினைக்கக்கூடும். ஆனால், எனக்கும் மணிவண்ணனுக்கும் இடையே ஆழ்ந்த சிநேகிதம் இருக்கிறது.

கொழும்பில், சனநெரிசல் உள்ள காஸ்வேக் வீதியில், ஒரு வீட்டு மேல்மாடியில், முன்பக்க அறையில் இருவரும் இரண்டு வருசமாகக் குடியிருப்பதனால்தான் இந்த நட்பு ஏற்பட்டது. என்றாலும் சொல்லிவிட முடியாது. ஒரே அறையில் இருந்தாலும் மூன்றே மாதங்களில் சண்டை பிடிக்கத் தொடங்கிய பல பேரை எனக்குத் தெரியும். சண்டை என்று பிடிக்காவிட்டாலும் அன்பு அனுசரணை இல்லாமல் யந்திரம் போல ஒரே அறையில் இருப்பவர்கள் பற்றியும் தெரியும்.

நினைத்துப் பார்க்கும் போது எனக்கே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

இந்த மெல்லிய உயரமான மென்மையான இயல்புள்ள தயங்கித் தயங்கிக் கதைக்கின்ற மணிவண்ணனை இத்தனை தூரம் பிடித்துப் போக என்ன காரணம்......

எனக்கே புரியவில்லை.

கொழும்பில் பத்தடிக்குப் பத்தடியில் ஒரு அறை வாடகைக்கு எடுப்பதில் இருக்கின்ற கஷ்டம் எனக்குத் தெரியும். அதுவும் யாழ்ப்பாணத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கத் தொடங்கிய பின் கொழும்பு, தமிழ் சனத்தாலும் நெரிபடுகிறது.

வீடுகளுக்கும் அறைகளுக்கும் இப்போது நினைத்தும் பார்க்க இயலாத அளவுக்கு வாடகைகள்..... முற்பணங்கள்...... கீழே கடையும் மேலே இரண்டு அறைகளுடான சிறிய மாடி வீடு இது. கீழே கடையை நடத்திக் கொண்டு மேலே தன் மனைவி, இரண்டு குழந்தைகளுடன் ஒரு அறையில் இருந்து கொண்டு தெருப்பக்க அறையை எனக்கு வாடகைக்குத் தந்திருந்தார்கள். நான் நான்கு வருடங்களாக இதில் இருக்கிறேன்.

இரண்டு வருசத்துக்கு முன்பு ஒரு வெள்ளிக்கிழமை, நான் வேலையால் திரும்பி வந்து முகம் கழுவி தேனீர் போட்டுக்குடித்து விட்டு ஆறுதலாய் இருந்த நேரம்தான் மணிவண்ணன் இந்த அறைக்குக் குடி வந்தான்.

**முப்பது வயதில் வாட்டசாட்டமாய், ஆனால் புத்தி பேதலித்த நிலையில் முடங்கிப்போய் மண் சுவரை சுரண்டியபடி படுத்திருக்கும் அவன் அண்ணாவைப் பார்க்க மனம் கலங்கிப்போனது. ஒரு காலத்தில் எவ்வளவு ஆரோக்கியமாய் இவன் இருந்திருப்பான். இப்போது இந்தக் கோலத்தில்......**

வாடகை பகிர்ந்து கொள்ளலாம் என்ற நினைவில் அவனை என்னுடன் இருக்கச் சம்மதித்தேன். முதல் பார்வையிலேயே அவனை எனக்குப் பிடித்துப்போய் விட்டது. அவனுடைய உடமைகள் என்று அதிகம் இல்லை. ஒரே ஒரு கருஞ்சிவப்பு நிற சூட்கேஸ் மட்டுமே வைத்திருந்தான்.

வெள்ளவத்தையில் ஒரு புத்தகக் கடையில் வேலை செய்வதாகச் சொன்னான். அவனின் குழந்தைத்தனமான முகத்தையும் மெல்லிய சிரிப்பையும் பார்க்க என் சின்னவனின் ஞாபகம் வந்தது. அந்த வினாடியில்தான் எங்கள் நட்பு துளிர்விட்டது: இந்த இரண்டு வருசத்திலும் ஆழவேரூன்றியது.

என் மனைவி பிள்ளைகள் முன்பு யாழ்ப்பாணத்தில் இருந்த போதும் இப்போது வன்னியில் இருக்கின்ற போதும் அவர்களை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கும் நடுவயதுக்காரன் நான்.

மணிவண்ணன் இருபத்தி நாலு வயதுக்குரிய துடிதுடிப்புடனும் சுறுசுறுப்புடனும் இருக்க வேண்டியவன். ஆனால், அவன் அப்படி இல்லாதது ஆச்சரியமான விடயம். இந்தக் காலத்து இளைஞர்களின் குணாதிசயங்கள் எதுவும் அவனிடம் இல்லை. கொழும்பில் பொழுது போக்க எத்தனை இடங்கள்...... எத்தனை விஷயங்கள் இருக்கின்றன. அவனுக்கு எதிலும் ஆர்வம் இருந்ததில்லை.

குறைந்த பட்சம் காலிமுகக் கடற்கரைக்குக் கூடப் போனதில்லை. அவன் கடையிலிருந்து திரும்பி வர எட்டு ஒன்பது மணியாகிவிடும். வரும் போதே கடையில் சாப்பிட்டு வந்து விடுவான். குளித்து விட்டு முன்பக்கம் அரைச்சுவர் வைத்த சிறிய விறாந்தையில் கதிரை போட்டு அமர்ந்து விடுவான். முகத்தை அந்த அரைச்சுவரில் பதித்துக் கொண்டு தெருவைப் பார்த்துக் கொண்டிருப்பான். மின் விளக்குகளின் ஒளியில் தெருவே பளிச்சிட்டுக் கொண்டிருக்கும்.

காஸ்வேக் வீதி பகல் இரவு என்று எல்லா நேரமும் சத்தம் சந்தடி உள்ள தெரு. நெரிசல்களாய் நடக்கும் மனிதர்களையும் சர் சர்ரென்று இரைச்சலுடன் தொடராய் நகர்ந்து போகும் வாகனங்களையும் அலுக்காமல் பார்த்துக்கொண்டிருப்பான்.

முதலாவது மாடியில் இருந்து பார்க்கும் போது ஐந்து லாம்படிச்சந்தி வரை தெரு நீளம் பார்வையில் பதியும். பக்கத்து சாப்பாட்டுக் கடையில் கொத்து ரொட்டி அடிக்கும் சத்தம் இடைவிடாமல் கேட்கும். நேர் கீழே தெரு ஓரம் தள்ளு வண்டியில் அப்பிள் பழமும் அன்னாசிப் பழமும் விற்கும் கிழவன். பழங்களின் கலவையான வாசனை மூக்கை நெருடும். அந்த முன்னிரவிலும் சத்தம் சந்தடி அடங்கிவிடாத சூழல்.

உள் அறையில் வீட்டுக்காரரின் தொலைக்காட்சி எந்நேரமும் போட்டபடி இருக்கும். செய்திகளை மட்டுமே மணிவண்ணன் பார்ப்பான். சினிமா பார்ப்பதிலும் அவ்வளவு ஆர்வமில்லை. புத்தகங்கள் மட்டும் தேடித் தேடிப் படித்தான். அவன் வாசிப்பதிலும் தரம் இருக்கும். இருபத்திநாலு வயதில் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தியின் எழுத்துக்களை வாசிக்கும் ஒருவரையும் என் வாழ்வில் இதுவரை நான் சந்தித்ததில்லை.

என் மூத்தவன் இந்த இருபத்திநாலு வயதில் கமலஹாசனையும் ரஜனிகாந்தையும் பற்றியே கதைத்துக் கொண்டிருந்திருக்கின்றான். மணிவண்ணன் என் அறைக்கு வந்த ஒரு மாதத்திலேயே அவன் குணங்கள் பற்றி புரிந்து கொள்ள முடிந்தது.

இந்த விறாந்தையில் இருந்து என்னுடன் கதைக்கும் நேரங்களில் தன் சொந்த விஷயங்கள் பற்றி சொல்லியிருக்கிறான். தன் அப்பா எண்பத்தி மூன்று இனக்கலவரத்தில் அனுராதபுரத்தில் சிங்களக் காடையர்களினால் கொல்லப்பட்டது பற்றி...... அம்மா தன்னையும் இரண்டு அண்ணாமாரையும் இரண்டு தங்கைகளையும் வளர்த்தெடுக்கப்பட்ட கஷ்டம் பற்றி..... தொண்ணூறில் விமானக் குண்டுவீச்சினால் வீடு தரைமட்டமானது பற்றி..... உறவினர் வீட்டில் கொக்குவிலில் வாழ்ந்தது பற்றி... சின்னண்ணா மாவீரராய் ஆனது பற்றி.... என்று ஒரு மனித வரலாற்றுக் காலங்களின் சில பகுதிகளை என்னுடன் பகிர்ந்து கொண்டிருக்கின்றான்.

எண்பத்தியெட்டில் அண்ணாவை இந்திய இராணுவம் பிடித்துக் கொண்டுபோய் பலாலியில் விட, அங்கிருந்து இலங்கை இராணுவம் பூஸாவுக்குக் கொண்டுபோய் நாலு வருடம் சிறைவாசம், விதம் விதமான சித்திரவதைகளின் பின் அரைகுறை உயிரில் புத்தி பேதலித்த நிலையில் விடுதலை செய்தது பற்றி சொன்ன போது அழுது விட்டான். இவ்வளவுடன் அவனது துயரம் முடியவில்லை. வலிகாம இடம்பெயர்வில் எனது குடும்பம் போலவே அவனது குடும்பமும் கிளிநொச்சிக்கு வர முயற்சித்தது. கிளாலிக் கரையில் நின்றபோது விமானம் குண்டு போட்டதில் தங்கை அதே இடத்தில் உடல் சிதறி பலியானாள். கண்முன்னே சிதறி, அங்கேயே மண்மூடி




அடக்கம் செய்து விட்டு தாய் அழுது கொண்டே மற்ற இரு பிள்ளைகளுடனும் கிளிநொச்சி வந்து உறவினருடன் இருக்கிறாள். இதைக் கடிதம் மூலமே மணிவண்ணன் அறிந்து கொண்டான். நாள் கணக்கில் அழுது கொண்டிருந்தவனை நான்தான் ஒருவாறு தேற்றி எழ வைத்தேன்.

ஒரே மனதுக்கு இத்தனை துன்பங்கள், துயரங்கள் நேரக்கூடும் என்று சத்தியமாக நான் இதுவரை நினைத்துப் பார்த்ததில்லை. அவனது வீடு மூன்று செத்த வீடுகளைத் தாங்கியிருக்கிறது. இந்தச் சின்ன வயதில் இவ்வளவு கவலைகளைச் சுமந்து கொண்டிருக்கிறானே என்ற நினைவு அவன் மீது இன்னும் அன்பு செலுத்த காரணமாகியது. இந்த அளவுக்கு நொந்து போயிருப்பவனை என் பிள்ளை மாதிரி நேசித்தேன்.

பின்னர் "சத்ஜய" இராணுவ நடவடிக்கையில் அடுத்த இடம்பெயர்வு. எனது குடும்பம் ஸ்கந்தபுரத்தில் தெரிந்தவர்கள் வீட்டுக் காணியில் கொட்டில் போட்டு குடியிருக்க, மணிவண்ணனின் அம்மாவும் அண்ணனும் தங்கையும் ஒமந்தையில் ஒரு உறவினர் வீட்டில் இருந்தார்கள்.

மணிவண்ணன் தன் செலவுகளைச் சுருக்கிக்கொண்டு அனுப்பும் காசில்தான் அவர்களுடைய சீவியம் நடக்கிறது.

மணிவண்ணனுக்கு வாழ்க்கை பற்றிய நல்ல கனவு இருக்கிறது. வறுமையையே வாழ்க்கையாய்க் கொண்ட தன் குடும்பத்தை நல்ல நிலைக்குக் கொண்டு வருவது அவனுடைய தீராத ஆசை. அதற்காகவே வெளிநாடு போகும் உத்தேசத்தோடு கொழும்பு வந்திருந்தான். உறவினர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் போது தம்முடன் கூப்பிடுவதாகச் சொல்லியிருந்தார்கள். அதனால் அதுவரை கொழும்பில் வேலை செய்து கொண்டிருக்கிறான். இந்தப் பிள்ளை எங்காவது போய் உழைத்து நன்றாக இருக்க வேண்டும் என்று மனதார நினைத்துக் கொள்வேன்.

வன்னிக்குப் போய் வரும் செலவுகளைக் கணக்குப் பார்த்து, அவன் தாய் சகோதரர்களைப் போய்ப் பார்க்கவில்லை.

நான்தான் போனமாதம் பொங்கலுடன் வன்னிக்குப் போய் வந்திருந்தேன். நான் போகும் போதே ஓமந்தையில் இருக்கும் மணிவண்ணனின் தாய் வீட்டிற்குப் போயிருந்தேன். என்னிடம் அவர்களிடம் கொடுப்பதற்காக இரண்டாயிரம் ரூபா தந்து விட்டிருந்தான். அவர்கள் அந்த சிறு கொட்டிலில் இருந்த கோலம் இன்றைக்கும் என் நெஞ்சை அழுத்திக் கொண்டுதான் இருக்கின்றது.

முப்பது வயதில் வாட்டசாட்டமாய், ஆனால் புத்தி பேதலித்த நிலையில் முடங்கிப்போய் மண் சுவரை சுரண்டியபடி படுத்திருக்கும் அவன் அண்ணாவைப் பார்க்க மனம் கலங்கிப் போனது. ஒரு காலத்தில் எவ்வளவு ஆரோக்கியமாய் இவன் இருந்திருப்பான். இப்போது இந்தக் கோலத்தில்......

கண்ணெதிரே அந்தப் பிள்ளையைப் பார்த்துப் பார்த்து அந்தத் தாய் மனம் என்ன பாடுபடும் என்று நினைத்ததும் எனது கண்கள் கசிந்தன. எப்பேர்ப்பட்ட அவலம் இது.

இவர்களைப் பார்த்ததில் பாரமாகிப் போன மனதுடன் ஸ்கந்தபுரம் போன எனக்கு என் குடும்பத்தின் நிலை இன்னும் மனப் பாரத்தைத் தந்தது.

ஒரு சிறு கொட்டிலில் அவர்களின் வாழ்க்கை. நல்ல தண்ணீருக்கு ஒரு மைல் போக வேண்டும். மூச்சுத் திணறும் அளவுக்குச் சன நெருக்கம். மீண்டும் மீண்டும் வரும் காய்ச்சல். மருந்துகள் போதிய அளவு இல்லாத நிலை. பல நெருக்கடிகளுக்கு நடுவில் அவர்களின் வாழ்க்கை.

அங்கு நீளம் நீளமாய் போடப்பட்ட கொட்டில்களில் நெருக்கமாய் இருந்த பிள்ளைகளைப் பார்த்தபோது மனம் பகீரென்றது. இந்த மாதிரி இடத்தில் இருந்து எப்படிப் படிப்பது? அந்த வினாடியில்தான் என் குடும்பத்தையும் கொழும்புக்குக் கூட்டி வரும் யோசனை தோன்றியது.

வயது வந்த பிள்ளைகள் வவுனியா தாண்டி வருவதில் இருக்கிற சிக்கல்கள் பற்றி யோசித்தேன். எல்லாவற்றையும் சமாளித்து இங்கே வந்து விட்டால் மூத்தவனை வெளிநாட்டுக்கு அனுப்பி விடலாம். மற்றவர்களைக் கொழும்பில் படிக்க வைக்கலாம். சின்னவன் இம்முறை ஏ.எல் எடுக்க வேணும். இங்கு நல்ல டியூசனுக்கு ஒழுங்கு செய்யலாம். யாழ்ப்பாணத்தில் அவனுக்கு முன்பு படிப்பித்தவர்கள் இப்போது கொழும்பிலதான் இருக்கின்றார்கள். எதுக்குமே வவுனியா தாண்டி வர வேணும். இங்கு எடுக்கும் ஒழுங்குகளைச் செய்து விட்டு அவர்களைப் புறப்பட்டு வரும்படி கடிதம் எழுத வேண்டும்.

இதற்கு யாரைப்பிடித்து அலுவல் செய்வது என்று தெரியவில்லை. கந்தோரில் எக்கவுண்டனாய் இருக்கும் குகதாஸன் ஏதாவது உதவி செய்யக்கூடும். நாளை வெள்ளி அவருடன் கதைத்துப்பார்க்க வேணும்.

இந்த நினைவில் ஒழுங்காகச் சாப்பிட முடிவதில்லை. என்ன சாப்பிட்டார்களோ என்று யோசனை. இரவுகளில் நித்திரை கொள்ள முடிவதில்லை. வன்னி மீதான படையெடுப்பு என்ற செய்திகள் கேட்டு மனம் கலங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு தடவை புரண்டு படுத்தேன். இரவு

தொடர்ச்சி 15ம் பக்கம்......

www.tamilarangam.net





# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதினேழு

(தொடர்ச்சி)

என்னைத் தடுப்பதற்காக அந்தச் சிப்பாய்கள் நின்று கொண்டிருந்ததைக் கண்டேன். நிகழக் கூடியவைகளில் முக்கியமானது அந்தக் கணத்தில் எனக்குள் நிகழ்ந்தது. பலஸ்தீனத்தில் நான் காலூன்ற வேண்டும், அல்லது செத்து மடிய வேண்டும் என்ற உறுதி வந்தது. எனக்கு என்ன நிகழ்ந்ததென்றே புரியவில்லை." சொல்லிவிட்டு அவனருகில் அமர்ந்தாள்.

"குழந்தாய் ஏதாவது சாப்பிட விரும்புகிறாயா?"

"எனக்குப் பசியாயில்லை. எங்களை என்ன செய்யப் போகிறார்கள்?"

பில் தோளைக் குலுக்கிக் கொண்டான். "இன்னும் சிறிது நேரத்தில் விடிந்து விடும். அவர்கள் எங்களைப் பரிசீலிக்கத் தொடங்குவார்கள். ஏராளமான முட்டாள்தனமான கேள்விகளைக் கேட்பார்கள். உனக்குத்தான் பதில்கள் தெரியுமே."

ஆமாம். அவர்கள் என்ன கேட்டாலும் இதுதான் எனது சொந்த மண் என்றே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கப் போகிறேன்."

"அதுதான் சரி, அவர்கள் உன்னை இங்கே இரண்டு, மூன்று மாதங்கள் வைத்திருந்து விட்டு உன்னை இங்கே விட்டு விடுவார்கள். குறைந்தது நீ, பலஸ்தீனத்திலேயாவது இருப்பாய்."

"உங்களுக்கு என்ன நடக்கும்?"

> இழப்பதற்கு எதுவுமில்லை...! இருப்பதற்கு இனிய நாடு ஒன்று போதும் என்ற உணர்வோடு ஒரு கையில் துப்பாக்கி! மறுகையில் மண்வெட்டி! ஊனின்றி, உறக்கமின்றி, வியர்வையையும், இரத்தத்தையும் விலையாகக் கொடுத்து ,விலைமதிப்பில்லாத் தங்கள் தாயகத்தை யூதமக்கள் மீட்டெடுக்கின்றார்கள்.

"எனக்கா. அவர்கள் என்னைப் போன முறையைப் போலவே பலஸ்த்தீனத்தில் இருந்து தூக்கி எறிந்து விடுவார்கள். எனக்கு இன்னொரு மொசாட் கப்பல் கிடைக்கும். திரும்பவும் தடையை மீறி வர முயற்சிப்பேன்."

அவள் தலை அளவுக்கு மீறி வலிக்கத் தொடங்கியது. அவள் சாய்ந்து கொண்டே பில்லின் வடுக்கள் நிறைந்த முகத்தைப் பல கணங்கள் நோக்கிக் கொண்டிருந்தாள். பின் கேட்டாள். "பில் நீ இங்கே ஏன் வந்தாய்?"

"நீ என்ன கேட்கிறாய்?"

"இல்லை. நீ ஒரு அமெரிக்கன். அமெரிக்க யூதர்களுக்கு அங்கே பிரச்சினை இல்லைத்தானே."

"எல்லோரும் ஏதோ நான் மகத்தான சேவை புரிவதாகச் சொல்ல முயல்கிறார்கள்." சொல்லிவிட்டு தனது பைகளைத் தட்டித் தன் சுருட்டுகளை வெளியே எடுத்தான். அவை நனைந்து போயிருந்தன. "அலியா பெற் என்னைத்தேடி வந்தது. மாலுமிகள் தங்களுக்குத் தேவையிருப்பதாகச் சொன்னார்கள். நான் ஒரு மாலுமி. அறைப்பையனாக இருந்து ஒரு முதற் தர அதிகாரியாக உயர்ந்தவன். வாழ்க்கை முழுவதுமே மாலுமியாக இருந்தவன். அவ்வளவு தான் விஷயம். இதற்கு எனக்குப் பணம் கிடைக்கும்."

"பில்"

"என்ன?"

"நான் நீ, சொல்வதை நம்பவில்லை"

பில் பிறை தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்வதாகவும் தோன்றவில்லை. அவன் எழுந்து நின்றான்.

"கரேன் இதை விளங்கப்படுத்துவது மிகவும் கஷ்டம். நான் அமெரிக்காவை மிகவும் விரும்புகின்றேன். ஐம்பது பலஸ்தீன்களுக்காகக் கூட அமெரிக்காவில் நான் பெற்றிருப்பவைகளை மாற்றிக் கொள்ள நான் தயாரக இல்லை.

கரேன் ஒரு தோள்மூட்டை ஊன்றிச் சரிந்து கொண்டாள். பில் தனது எண்ணங்களை கோர்வையாக்க முயற்ச்சி செய்தபடியே கூடாரத்தினுள் அங்கும் இங்கும் நடந்தான். "நாங்கள் அமெரிக்கர்கள் தான். ஆனால் ஒரு வித்தியாசமான வகை அமெரிக்கர்கள். நாங்களே எங்களை வித்தியாசமாகக் கொள்கிறோமோ தெரியவில்லை ... வேறு ஆட்கள் என்னை வித்தியாசமான வனாக்குகிறார்களோ தெரியவில்லை. இவைகளைத் தெரிந்து கொள்வதற்கு நான் புத்திசாலியில்லை.

என்னுடைய வாழ்க்கை முழுவதும் நான் யூதனாயிருக்கும் காரணத்தால் ஒரு பேடியென மற்றவர்கள் கருதுவதை நான் உணர்ந்திருக்கின்றேன். நான் உனக்கு ஒன்றை மட்டும் சொல்ல விடு. பிரிட்டிஷ் களஞ்சியங்களை பால்மாக்குகள் தகர்க்கும் ஒவ்வோரு முறையும், அல்லது அரபுகளுக்கு நரகத்தைக் காட்டும் ஒவ்வொரு முறையும் அவர்கள் என் சுயமரியாதையை வென்று தருகிறார்கள். யூதர்கள் எல்லோரும் பேடிகள் என்று சொல்வோரைப் பொய்யர்களாக்குகிறார்கள். இங்கே போராடும் போராளி ஒவ்வொருவனும் எனது சுய மரியாதையை வென்றெடுக்கும் யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிறான்.... உனக்கு அது புரிகிறதா?"

"புரிகிறதென்றுதான் நினைக்கிறேன்."

"எனக்கென்றால் விளங்குவது கடினம்." சொல்லிவிட்டு அவளருகில் அமர்ந்த அவன் அவளது தலையிலிருந்த வீக்கத்தைப் பரிசீலித்தான்.

"இது அவ்வளவு மோசமாயில்லை. நான் உன்னை வைத்தியசாலைக்குக் கூட்டிக் கொண்டு போகச் சொல்லியிருக்கிறேன்."

"பரவாயில்லை எனக்கு ஒன்றுமில்லை."

அன்றிரவு பால்மாக்குகள் அட்லிட் முகாமின் மேல் தாக்குதல் ஒன்றை நிகழ்த்தினார்கள். முட்கம்பி வேலியில் ஏற்படுத்தப்பட்ட பெரிய துவாரத்தினூடாக மேலும் 200 அகதிகள் வரை தப்பிச் சென்றனர். தப்பிச் சென்றவர்களுள் கரேனும், பில்பிறையும் இருக்கவில்லை.

"ஸ்டார் ஒவ் டேவிட்" சம்பவத்தின் முழு விபரமும் வைற்ஹோலை எட்டியபோது, தங்கள் குடிவரவுக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பிரிட்டிஷார் உணர்ந்து கொண்டார்கள். இது நாள் வரை சட்டவிரோதமான கப்பல்கள் நூற்றுக்"" கணக்கானவர்களையே உள்கொண்டு வந்திருந்தன. ஆனால் இந்தக் கப்பலோ இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோரைக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல் அவர்களுள் பெரும் பாலானோர் செசாறியோவில் நடந்த கரையேறும் நிகழ்ச்சியிலும், அதைத் தொடர்ந்து அட்லிட் முகாமில் நடந்த தாக்குதலின் போதும் தப்பிச் சென்றிருந்தார்கள். பிரெஞ்சு அரசாங்கம் வெளிப்படையாகவே யூதர்களுக்கு உதவுவதையும், பலஸ்தீனத்திலிருக்கும் ஒவ்வொரு ஆறு யூதரில் ஒரு யூதன் சட்டவிரோதமாக வந்து சேர்ந்தவன் என்ற உண்மையையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

ஆகவே, பிரிட்டிஷார் ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டனர். எப்போதும் போலவே பலஸ்தீனிய பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதிலிருந்து வெகு தூரத்தில் இருந்ததோடு, யூதர்களை அட்லிட்டில் வைத்திருக்காமல் பலஸ்தீனத்தில் இருந்து திருப்பி அனுப்ப வேண்டும் என்ற முடிவும் எடுக்கப் பட்டது. சைப்பிரசில் ஏற்படுத்தப்பட்ட முகாம்கள், சட்ட விரோதக் குடியேற்றக்காரர்களால் ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களில் விசேடமாக, "ஸ்டார் ஒவ் டேவிட்" சம்பந்தப்பட்ட வெற்றியின் நேரடிப் பிரதிபலிப்பே.

**லியோன் யூறிஸ்**

கரேன் ஹான்சன் கிளமென்ற், பிரிட்டிஷ் சிறைக் கப்பல் ஒன்றில் சைப்பிரஸ் தீவுகளுக்கு அனுப்பப்பட்டு கராஓலொஸ் முகாமில் வைக்கப்பட்டாள்.

ஆயினும், "கார்பத்தோஸ்" அல்லது "ஸ்டார் ஒவ் டேவிட்" கற்களிடையே சிக்குண்டு அலைகளால் மோதப்பட்டு சின்னாபின்னமாகிக் கொண்டிருந்த வேளையில், மொசாட் அலியா பெற் அதனைத் தொடர்ந்து மேலும் பல கப்பல்களைப் பெறவும் அதிக அளவிலான அகதிகளைக் கொண்டு செல்வதற்குமான தங்கள் திட்டங்களை விரைந்து செயற்படுத்திக் கொண்டிருந்தனர்.

ஆறுமாத காலத்திற்குக் கரேன் கராஓலொஸ் முகாமில் தன் பிள்ளைகளிடையில் சேவையாற்றி வந்தாள். நாடு கடத்தும் முகாம்களிலும், தடுப்பு முகாம்களிலும் அவள் செலவிட்ட காலங்கள் அவளை விரக்தியடையவோ வெறுப்படையவோ செய்யவில்லை. அவள் வாழ்ந்ததெல்லாம் பலஸ்தீனத்தை மீண்டும் காணப்போகும் காரணத்துக்காகத்தான். "எறெற்ஸ் இஸ்ரேல்"........... அந்த மந்திர வார்த்தைகள் அவளினது தாரக மந்திரமாயிற்று.

தன் கதையைக் கரேன் கிற்றி பிறமென்ருக்கு சொல்லி முடித்தபோது பல மணி நேரங்கள் கடந்திருந்தன. இப்படியாக அவர்களிடையே ஒரு பிடிப்பேற்படத் தொடங்கியிருந்தது. ஒவ்வொருவரும் மற்றவருடைய தனிமையையும். நட்புக்காக ஏங்கும் தன்மையையும் உணர்ந்து கொண்டனர்.

உன் தகப்பனாரைப்பற்றி மேலும் ஏதாவது கேள்விப்பட்டாயா?" கிற்றி கரேனைக் கேட்டாள்.

"இல்லை, லாசியோடாட்டுக்குப் பிறகு எதுவும் கேள்விப்படவில்லை அதுவும் நீண்டகாலத்துக்கு முதற்தான்."

கிற்றி தன்னுடைய கைக்கடிகாரத்தை நோக்கினாள்.

"கடவுளே நடுச்சாமமாகிவிட்டது."

"நான் நேரம் கடந்ததை உணரவில்லை." என்றாள் கரேன்.

"நானும் தான். குட்நைற் குழந்தாய்."

"குட்நைற் கிற்றி மீண்டும் உன்னைக் காண்பேனா?"

"சிலவேளை காணலாம். என்னால் உறுதி கூறமுடியாது."

கிற்றி வெளியே வந்து அக்கட்டிடத்தை விட்டு நடந்தாள். ஆயிரக்கணக்கான கூடாரங்கள் இப்போ மௌனத்துள் ஆழ்ந்திருந்தன. கடல் அலைபோல படர்ந்திருந்த கன்வஸ் கூடாரக் கூரைகளின் மேல் காவலரணிலிருந்து ஒரு தேடுதல் விளக்கின் (search light) ஒளிக்கதிர்கள் படர்ந்து சென்றன. அவள் தனது மேலங்கியை இறுகப் போர்த்துக் கொண்டபோது கிளம்பிய புழுதி அவள் கால்களைச் சுற்றிப் பறந்தது. அரிபென்கானாவின் உயரமான உருவம் அவளை நோக்கி வந்து நின்றது. அவன் ஒரு சிகரெட்டை அவளிடம் கொடுத்தான். இருவருமாக மௌனமாகப் பாலத்தின் வழியாகப் பிள்ளைகள் பிரிவிலிருந்து வெளியே சென்றனர். கிற்றி ஒருமுறை நின்று பின்னாற் திரும்பிப் பார்த்து விட்டு வயதானவர்களின் பிரிவுக்கூடாகப் பிரதான வாயிலுக்குச் சென்றாள்.

"நான் ஒரேயோரு நிபந்தனையின் பேரில் உங்களுக்காக வேலை செய்கிறேன். அந்தப் பெண் தப்பிச் செல்லக் கூடாது. அவள் என்னோடு முகாமில் தங்கியிருக்கட்டும்."

"அப்படியே ஆகட்டும்."

தொடரும்...

www.tamilarangam.net






## நீ எங்கே?

அம்மா,
நான் தூங்க
உன் மடியின்றி
என் தலை நோகுதம்மா–என்
தலை கோதும்
உன் விரல் காண
மனம் ஏங்குதம்மா!

**–திருமதி சந்திரவதனா செல்வகுமாரன், யேர்மனி.**

## ஆராரோ ஆரிவரோ!

பாரதனில் கண்துயில
வழியுண்டு
ஈழமதில் தமிழன் கண்ணயர
வழியேது?
கண்துயிலும் சுகமிழந்து
சிறுகுஞ்சு, பெட்டியிலே
தலைவைத்து உறங்கியதோ!
நெஞ்சு வெடிக்கிறதே
நேர்வந்துன்னை
அள்ளி அணைத்து
ஆராரோ பாடுவேனோ?

**–கஜானனி கலேஸ்வரன், யேர்மனி.**

## தூரதேச உறவுகளே!

சேர்ந்திருந்த உறவெல்லாம்
சிதைந்துபோக–ஆதரிக்க
யாருமின்றி நாதியற்று
ஆவிசோர தெருவில்...
வீழ்ந்துபட விடலாமோ?
தூரதேச உறவுகளே
பாராமுகம் இனியும் வேண்டாம்!

**–வல்வை கித்துள்**



## ஒரு விடிவிற்கான தாலாட்டு

விழிமூட இடமற்ற விதியானதோ–உன்
விளையாட்டு பருவங்கள் கனவானதோ
விழிநீரை சொரிதல் தொடரானதோ–பகை
விளையாட உன்வாழ்வு திடலானதோ
களையாத மனதோடு கண் தூங்கட்டும்
நீகாண்கின்ற கனவோடு மண்மீளட்டும்
விடியாத இரவேதும் கிடையாதம்மா நாம்
விழிப்போடு இருக்கின்றோம்
இமை மூடம்மா!

**–ஞானி, யேர்மனி.**

## விடியல்

பூமித் தரையில்
உறங்குகின்ற
இவள் கண்களுக்கு
நாளை
விடியலின் வெளிச்சம்
இவள்
மனதில் எரிக்கும்

**–துஸந்தி, பிரான்ஸ்.**

## சிந்தியுங்கள்

சருகோடு சருகாக
ஒரு இளம் தளிர்
இவள்
உரிமையை இழந்துவிட்ட
நம் உறவு
இருதயம் உள்ளவர்களே
இது பற்றிச் சிந்தியுங்கள்!

**–க. சிறிபாஸ்கரன், யேர்மனி.**

## பெண் வேங்கை

வஞ்சகம் அறியாத பிள்ளை முகம்
பெற்றோரை இழந்த கண்களில்
கண்ணீர் வெள்ளம்
என்ன பாவம் இவள் செய்தாளோ
இதை எவர்தான் அறிவாரோ
இனவெறியன் செய்த செய்கையதால்
நாளை பாயும் புலி இவள்தான்!

**–திருஷ்ஜா திருநாவுக்கரசு, யேர்மனி.**

## கலங்காதே மகளே!

நாடிழந்து வீடிழந்து
தாய் தந்தை உடன் பிறப்புக்களை
இழந்த உனக்கு வீதிதான் வீடா?
பிஞ்சுகளின் தோட்டத்திலே
உனை வளர்க்க
எம் தலைவன் இருக்கின்றான்
கலங்காதே மகளே!

**–கவிக்குயில், யேர்மனி.**

## சின்னக்குயில்

சின்னக்குயிலொன்று
சிறகொடிந்து வீழ்ந்ததுவோ
அன்னைதண்ணி இல்லை
அரவணைக்க யாருமில்லை
சிங்களக் கொடுமையது
திணித்திட்ட வாழ்விதுதான்...!
இன்னும் எத்தனைநாள்
எட்டிநின்று பார்த்திருப்போம்?

**–பரதன், லண்டன்.**

## எழுந்திரு மகளே

மருமகளே! வந்த வழியில் தூக்கமா?
யாருமில்லையென்று ஏக்கமா?
வெட்டவெளியிலே கட்டாந்தரையிலே
பெட்டி தலையணையாக.......
ஈழநாட்டின் திருமகளே! கலங்காதே!
விழியினை திற! வழியுண்டென்று நட!
தமிழ் மகளே! கொஞ்சம் பொறு மகளே! மாமாக்கள் போர்
முனையில்......!

**–புங்கையூர் மதி, சுவிஸ்.**

## கண்மணியே கண்வளராய்!

வெட்டவெளிப் பொட்டலிலே
'வேதனை' அறியாப் பிஞ்சது
அரவணைக்க யாருமின்றி
பாதையிலே படுக்கைதனை
தானமைத்துக் கொண்டதுவோ..!
வேளைவரும் வெங்கொடுமை
போயொழிந்து– நீ துயில்வாய்....
கண்வளர்வாய் கண்மணியே!

**–கஜானி கலேஸ்வரன்–யேர்மனி**

## ஆக்கங்கள் அனுப்பியோர்

யேர்மனி–திருமதி இராஜேஸ்வரி லோகநாதன், தலைத்தீவான், அ. வேணுகோபாலன், ரஜனி, இணுவை உமா, பொ. கிருஷ்ணகோபால், விளானூரான், வீ நடா, திருமதி சீதாதேவி, திருமதி விமலா சச்சிதானந்தன், பாலச்சந்திரன், செல்ல முத்துக்குமாரசாமி, பருத்தியூர் சிறிராமசோதி, குமுதா, பாலசிங்கம் முருகதாசன்
இத்தாலி– த. முகுந்தன், த. தனீஷ், காரை ந, சேகர், லே. ராஜன், தொண்டைமானாறு செல்லம், யோ. நந்தகுமார்
லண்டன்– ஊரான், ச. மயூரன்
பிரான்ஸ்–சுவித்தா
அவுஸ்திரேலியா–செல்வி சித்திரா
சுவிஸ்–வல்வை பாபு
நோர்வே–சனா, விகுணா
செல்வி பொன்னுத்துரை சுபாசினி, செ. ஈழமணி, வல்வை ஜொவித்தா, அமலா ஜெயந்தன்.

## காவலர்கள் எமக்குண்டு

ஊரைவிட்டுக் கலைத்தார்கள்
உறவை விட்டுப் பிரித்தார்கள்
கூடி வந்த பெற்றோரை
எறிகணையால் பறித்தார்கள்
போகுமிடம் தெரியவில்லை
பொதிமேலே தூங்கிவிட்டாய்
கலங்காதே கண்மணியே!
காவலர்கள் எமக்குண்டு!!

**–மலரவன், சுவிஸ்.**

## விடிவெள்ளி தோன்றிடாதோ?

சிட்டுக் குருவிபோல் பறந்து திரிந்து
கொஞ்சும் மொழிபேசிய கிளியே,
எதிரிப்படை விரட்டியதால்,
ஓய்ந்து விட்டனவா உன் கால்கள்
பெற்றவரை உற்றவரை தொலைத்து
நீண்டதூரம் சென்றதால்
சோர்ந்தாயோ மனம் நீ, விழிக்கும்வேளை
விடிவெள்ளி வானில் தோன்றிடாதோ?

**–வசந்தி சுந்தரலிங்கம், யேர்மனி.**

www.tamilarangam.net



# முற்றுகை.....

## (சிறுகதை)

பதினொரு மணிக்கு மேலாய் இருக்கும் என்று தோன்றியது. தெருவில் இன்னமும் சந்தடி அடங்கவில்லை. தொம் தொம் என்ற பின்னணி அதிர்வுடன் பெரிய சத்தத்தில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது.

மணிவண்ணன் மேசை விளக்கைப் போட்டு விட்டு ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். சமீப நாட்களாய் அவனின் வெளிநாடு செல்லும் ஆசை பலவீனமடைந்து வருவது போல் தோன்றியது. நாலைந்து இலட்சம் அவனுக்காகச் செலவழிக்க யாரும் முன்வரவில்லையோ என்னவோ. இந்த இரண்டு வருசத்திலும் அவனுக்கு நாலைந்து இடத்தால் நாலாயிரம், ஐயாயிரம் என்றுதான் அவனுக்கு நாலு தடவைகள் காசு வந்திருந்தது. அவ்வளவுடன் அந்த உறவினர்கள் கைவிட்டு விட்டார்களோ தெரியவில்லை. ஆனாலும், மணிவண்ணன் ஏதோ நம்பிக்கையுடன் காத்திருப்பதாகத்தான் தோன்றுகிறது.

இப்போது அவன் அந்த வெளிநாட்டு உறவினருக்குத்தான் கடிதம் எழுது கிறானோ அல்லது தன் அம்மாவுக்குத்தான் எழுதுகிறானோ....... அவன் முகத்திலிருந்து எதையும் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனாலும், ஏதோ படு தீவிரமாக யோசித்துக்கொண்டு எழுதுகிறான். ஏதோ பத்திரிகைக்குக் கவிதை எழுதுகிறானோ....... கவிதை எழுதுகிறவன் முகத்தில் இத்தனை இறுக்கமும் யோசனையும் இருக்குமா.......

சொல்லமுடியாது. யோசனையும் கவலையும் உள்ளவன்தான் கவிதை எழுதுவான். இவன் கவிதைகள் எழுதியுமிருக்கிறான்.

"தம்பி...."

என் குரல் கேட்டு மணிவண்ணன் திரும்பினான்.

"பதினொரு மணிக்கு மேலாகுது. அப்பிடி என்ன எழுதுகிறாய் படுக்காமல்"

"இல்லை அண்ணை. ஜேர்மனியில இருக்கிற எங்கட சொந்தக்கார அண்ணனுக்கு என்னை எப்படியும் கெதியாய் கூப்பிடச்சொல்லி கேட்டு எழுதிறன். நான் வந்து உழைச்சு முழுக்காசும் வட்டியோட தாறன். எப்பிடியும் கூப்பிடுங்கோ எண்டு எழுதிறன்". எனக்கு அவனைப் பார்க்கப் பாவமாய் இருந்தது.

"எழுதி முடிச்சிட்டன் அண்ணை. இந்தா வாறன்" எழுதிய காகிதத்தை மடித்தான். திடீரென வெளியே தடதடவென சத்தம் கேட்டது. கதவு இடிபட்டது. அழைப்பு மணி விடாது ஒலித்தது. வெல வெலத்துப்போய் எழுந்தோம்.

"செக் பண்ண வாறாங்கள் போல கிடக்கு."

வீட்டுகாரனின் குரல் கிசுகிசுப்பாய்க் கேட்டது.

இப்படி இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வந்து பார்த்து விசாரித்து விட்டுப்போவது வழக்கம்தான். ஆனால், இன்றைக்கு ஒரு அவசரம் தெரிந்தது.

வீட்டுக்காரர் ஓடிப்போய் கதவைத் திறந்தார். பொலிஸாரும் இராணுவத்தினருமாய் பத்துப்பேர் வரை உள்ளே வந்தார்கள். அவர்களின் முகங்களில் இறுக்கம். வெளிச்சிட்ட மின் விளக்கின் ஒளியில் அவர்களைப் பார்க்க ஒருவித பயம் மனதில் எழுந்தது.

முன்னால் வந்தவன் நேராக மணிவண்ணனிடம் வந்து என்ன ஏது என்று எதுவும் கேட்காது பளாரென அறைந்தான். அந்தச்செய்கையில் அவர்களின் ஆத்திரம் அப்பட்டமாய்த் தெரிந்தது. தடுமாறி விழப்போன மணிவண்ணனை நான் ஓடிப்போய் பிடித்துக்கொண்டேன்.

மணிவண்ணனைப் பார்த்து மிக ஆபாசமான வார்த்தைகளில் திட்டினார்கள். ஒவ்வொரு அறைக்கும் போய்ப் பார்த்தார்கள். **மணிவண்ணனை சுவரோரம் தள்ளி நிறுத்தி ஏதோ கேட்டார்கள்.. கண்கள் தழும்பி நிற்க அவன் பயத்துடன் ஏதோ சொல்வது எனக்குக் தெரிந்தது.**

**எங்கோ ஒரு தாக்குதலில் அவர்களது இழப்பு பெரிதாக இருந்திருக்க வேண்டும். அதன் பிரதிபலிப்புத்தான் இந்த ஆத்திரம் எனப் புரிந்தது.**

அறைக்குள் இருந்த எங்கள் உடமைகளை ஆராய்ந்தார்கள், மணிவண்ணனின் சூட்கேசை கவிழ்த்துக் கொட்டினார்கள், அவனை விரோதத்துடன் பார்த்து,

"உன்னை விசாரிக்க வேணும் வா" என்றார்கள். புத்தகக் கடையில் வேலை செய்யும் அப்பாவி அவன் என்று எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்டுக் கொள்ளவில்லை. மணிவண்ணனைத் தள்ளிக்கொண்டு போனார்கள்.

கீழே நின்ற வானில் அவனைப்போலவே அந்தத் தெருவில் இருந்த பல இளைஞர்களையும் ஏற்றினார்கள்.



பின்னால் தாய்மாரின் அழுகை இருளைக் கிழித்துக்கொண்டு அவலமாய்க்கேட்டது. என்ன செய்வது என்று திகைப்பாக இருந்தது. மணிவண்ணன் என்னைப் பயத்துடன் பார்த்தான். அதற்குள் வான் கதவு மூடிக்கொள்ள வான் புறப்பட்டுப்போனது. விடிந்ததும் எதையாவது செய்யலாம். மிகுதி இரவு நித்திரையின்றியே கழிந்து போனது.

மிகவும் அதிகாலையில் பக்கத்துக் கடை பொன்னம்பலத்துடன் அருகே இருந்த பொலிஸ் நிலையத்துக்குப் போனேன். மேலும் சிலர் நின்றிருந்தார்கள். யாரையும் உள்ளே அனுமதிக்கவில்லை. விசாரித்து விட்டு அனுப்பிவைப்போம் என்றார்கள். ஏழரை மணிவரை நின்றுவிட்டுத் திரும்பினேன். எப்படியும் விசாரித்து விட்டு குற்றமில்லை எனக்கண்டால் வீட்டுக்கு அனுப்பிவிடு வார்கள் என்று மனதுக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டேன்.

அறைக்குள் வந்து குளித்து உடை மாற்றி அலுவலகம் போகப் புறப்பட்டேன். கதவைப் பூட்டிக்கொண்டு கீழே இறங்கினேன். பக்கத்து ஒழுங்கை முகப்பில் ஒரு நடுத்தர வயதுப் பெண் தரையில் அமர்ந்து "நம்ப புள்ளையைப் புடிச்சுக்கிட்டு போயிட்டாங்க பாவிங்க...." என்று அமர்ந்து ஓலமிட்டு அழுது கொண்டிருந்தாள்.

**கவலை நெஞ்சை அழுத்தியது. வீதியில் நடந்தேன். தள்ளு வண்டியில் பழங்கள் விற்கும் பியசேன கிழவன் என்னைப் பார்த்து சினேகிதமாய்ச் சிரித்தான். இந்தக் கிழவனுக்கு அரசியல் தெரியாது. இவன் மனதில் இன்னமும் இனவாதம் விதைக் கப்படவில்லை. பாவம். அதனால் தான் இப்படிச் சிரிக்கிறான் என்று நினைக்கத் தோன்றியது.**

காலை எட்டேகால் மணிக்கு வீதி விலத்த முடியாத அளவுக்கு நெரிசலாய் இருந்தது. ஆட்களை உரசும் அளவுக்கு நெருக்கமாய் வாகனங்கள் கடந்து போயின. நான் ஐந்து லாம்படிச் சந்தி கடந்து இடப்பக்கமாய் பிரதான வீதியில் நடந்தேன்.

எப்படியும் அலுவலகம் போய் கையெழுத்து வைத்து விட்டோ அல்லது லீவு எடுத்துக்கொண்டோ மணிவண்ணன் பற்றி விசாரிக்கப் போகவேண்டும். அவங்கள் விடுவாங்கள் என்றும் நம்பியிருக்க முடியாது.

குகதாஸனுக்குத் தெரிந்த வர்கள் யார் மூலமாவது எடுத்துத்தரச் சொல்லிக் கேட்டுப் பார்க்கலாம். அவர் ஏதும் உதவி செய்யக்கூடும். இதே குகதாஸன் முன்பு என்றால் ஒருவித மிடுக்குடன்தான் நடந்து கொள்வார். தன்னிலும் பதவி குறைந்த வர்களுடன் அதிகாரத் தோரணையுடன் தான் கதைப்பார்.

இப்போது அவரிலும் நிறைய மாற்றம். அவரின் உயர்மட்ட பதவிகளில் இருக்கும் சிங்கள வர்களுடன் இப்போது இயல்பாகப் பழக முடியாத நிலையில் தமிழர்களுடன் பதவி வேறுபாடு காட்டாமல் கதைத்துக் கொள்கிறார். இதுவும் ஒருவகையில் கால மாற்றம்தான்.

பிரதான வீதியின் அத்தனை புடவைக் கடைகளையும் கடந்து மணிக்கூட்டுச் சந்தி வந்து திரும்பி என் அலுவலகம் அடைந்தேன்.

மனதுக்குள் என் வீடு பற்றிய யோசனைகளையும் மீறிக்கொண்டு பிரச்சனை.....

அலுவலகத்தில் என்னைச் சுற்றிலும் கலகலப்பும் சிரிப்புமாகத் திரிபவர்களைப் பார்க்க இவர்கள் வேறு ஏதோ உலகத்தில் இருப்பதாகப் பட்டது. சிறிது எரிச்சலாகக்கூட இருந்தது. என்னை மாதிரி கவலை இங்கு எத்தனை பேருக்கு இருக்கிறது? என் அலுவலகத்திலேயே யாருடனும் மனம் விட்டுக் கதைக்க முடியவில்லை. ஒரு அந்நியத்தன்மை இயல்பாய் வந்துவிட்டது.

குகதாஸனைத் தேடியபோது இன்று லீவு என்றார்கள். இனித் திங்கள்தான் அவரைப் பார்க்கமுடியும்.

எனக்கு இருப்புக்கொள்ளவில்லை. லீவு போட்டுவிட்டு மறுபடி வீடு வந்தேன். ஏதும் தகவல் தெரியக்கூடுமோ என்ற எதிர்பார்ப்பு...... மணிவண்ணனுக்கு அடித்துக்கிடித்து விடுவார்களோ என்ற தவிப்பு......

வீட்டுக்காரர் சொன்னார், "கடைப் பொன்னம்பலம் திரும்பவும் போய்விட்டு வந்தவர். பார்க்க ஒருத்தரையும் விடேலையாம், ஆனா மணிவண்ணனோட சேர்த்து அவற்ற பொடியனையும் வேற கொஞ்சப் பொடியளையும் வானில ஏத்தி கிருலப்பனைக்குக் கொண்டு போறாங்களாம். இங்க வந்து சொல்லிப்போட்டு போறார்."

ஐந்து லாம்படிச் சந்தியில் பிடித்தவனை கிருலப்பனை வரை ஏன் கொண்டு போனார்கள் என்று புரியவில்லை. கிருலப்பனை போவதானால் இரண்டு பஸ் பிடிக்க வேண்டும். கிருலப்பனைச் சந்தியில் பெரிய சோதனைச் சாவடி. அது கடந்து போக வேணும். அலைச்சல்தான். அந்த அலைச்சலை எனது உடம்பு தாங்குமா என்று நான் கவலைப்படவில்லை. உடலும் பஸ் எடுத்து வெள்ளவத்தைக்குப் போனேன். வெள்ளவத்தையில மணி வண்ணன் வேலை செய்த புத்தகக் கடை முதலாளியிடம் அவன் இரண்டு வருடமாய் அங்கு வேலை செய்ததாய் கடிதம் வாங்கிக் கொண்டு கிருலப்பனைக்குப் போனேன். சந்தியில் சோதனைச் சாவடியில் அடையாள அட்டை காட்டிப்போக வரிசையாக நிற்க நேரிட்டது.

சுள்ளென்ற வெய்யிலில் வேர்வைப் பிசுபிசுப்புடன் நின்றவர்களின் முகத்தில் அலுப்பும் சினமும் தெரிந்தது. ஏதோ ஒரு வகையில் அந்தக்காலத்து யாழ்ப்பாணத்தை எனக்கு நினைவூட்டியது. இவர்களின் அலுப்பும் சினமும் ஒரு வகையில் சந்தோசத்தைத் தந்தது. சோதனை முடிந்து சிறிது தூரம் நடந்து அந்தக் கட்டடத்தை நெருங்கினேன்.

வாசலில் விட மறுத்தார்கள். மிகவும் தோரணையுடன் வந்த அதிகாரியிடம் ஆங்கிலத்தில் கதைத்துப் பார்த்தேன். சிங்களத்தில் கதைத்துப் பார்த்தேன். அவன் இளகுவதாக இல்லை.

"விசாரித்துவிட்டு விடுகிறோம் நீ போ..." என்று ஆங்கிலத்தில் உறுமினான். ஒரு தடவை மணிவண்ணனைப் பார்க்க அனுமதிக்கும்படி கெஞ்சினேன். முடியாது என மறுத்தான். இன்னொரு பச்சை உடைக்காரன் எனது தோளைப் பிடித்து தள்ளிவிட்டான்.

என் ஐம்பத்திநாலு வயதுக்காலத்தில் இப்படி ஒரு அவமதிப்பை நான் அனுபவித்ததில்லை.

என்னால் இனி செய்யக்கூடியது எதுவும் இல்லை. மிகுந்த வேதனையுடன் அறைக்குத் திரும்பினேன். இனி மணிவண்ணனின் தலைவிதி. இனி அவன் நிலை என்ன ஆகுமோ? மனதுக்குள் ஒரே கலக்கம்.

சனி, ஞாயிறு முழுவதும் இந்தக் கலக்கத்துடனேயே கழிந்தது.

திங்கள் காலை அலுவலகம் புறப்பட்டு கதவு பூட்டி கீழே இறங்க கடைப் பொன்னம்பலம் எதிரே வந்தார்.

"அண்ணை என்ரை பொடியனை ஓடு எண்டு விட்டிட்டாங்களாம். அவன்தான் வந்து சொன்னான், மணிவண்ணனுக்கு ஒரே அடியும் உதையுமாம். இரவு முழுக்க மயக்கத்தில கிடந்தவனாம். சுவரோட மோதி பின்மண்டை உடைஞ்சிட்டுதாம். ரத்தம் வழியுதெண்டு மருந்து கூடக் கட்டேலையாம். மணிவண்ணன் அழுது கொண்டி ருக்கிறானாம். தன்னை எப்படியும் வெளியில எடுக்கச் சொல்லி உங்களிட்டச் சொல்லிவிடச் சொன்னவனாம்."

கடவுளே..... என்று பதறிப்போனேன்.

"மணிவண்ணனை விசாரிக்க எண்டு வேற எங்காவது கொண்டு போனால் பிறகு எடுக்கிறது கஷ்டம். ஆரையாவது பிடிச்சு அலுவல் பாருங்கோ அண்ணை. "ஏதோ என்ர நல்ல காலம் நாலு அடியோட என்ர பிள்ளையை விட்டிட்டார்கள்."

அவனின் தலைவிதி என்று இரண்டு நாளாக அந்தப் பிள்ளையை எப்படி விட்டிட்டு இருந்தேன் என்று என் மீதே கோபம் வந்தது. அடிவயிறு காந்தியது. ஏதாவது செய்ய வேண்டும்; உடனேயே..... உடனேயே....

அவசரமாய் படியேறி மறுபடி அறைக்கு வந்து "எக்காரணம் கொண்டும் கொழும்புக்கு வரவேண்டாம், ஸ்கந்த புரத்திலேயே இருக்கவும்" என்று வீட்டுக்கு கடிதம் எழுதி எடுத்துக்கொண்டு கீழே இறங்கினேன்.

"மணிவண்ணனுக்குச் சரியான அடி. பாவம்" என்று பொன்னம்பலம் நடைபாதையில் நின்று யாருக்கோ சொல்லிக்கொண்டிருந்தார்.

கடவுளே...... அந்தப் பிள்ளைக்குத்தான் எத்தனை சுமை எத்தனை கவலை.

இப்போது புதிதாய் இந்த அழுத்தமும். இதை உடைத்து எப்படியும் என்ன பாடுபட்டும் அந்தப் பிள்ளையை மீட்டு விட வேண்டும்.

அந்தத் தாய்க்கு புத்தி பேதலித்த ஒரு பிள்ளையே இந்த ஜென்மத்துக்குப் போதும். நான் குகதாஸனைத் தேடி அவசரமாய் ஓடினேன். ✱

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யேர்மனி, இத்தாலி நாடுகளில் நடைபெற்ற தமிழீழ எழுச்சி நிகழ்வுகள்




28 - 09 - 97 அன்று இத்தாலி பலேர்மோ மாநகரில் தியாகி லெப்.கேணல் திலீபனின் 10 ம் ஆண்டு நினைவை முன்னிட்டு நடைபெத்த கலை நிகழ்ச்சிகளின் போது...





04 - 10 - 97 அன்று யேர்மனி முன்ஸ்ரர் நகரில் லெப்.கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் 10 ம் ஆண்டு நினைவையொட்டி நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளின் போது...




20 - 09 - 97 அன்று யேர்மனி கேர்ண் நகரில் தியாகதீபம் திலீபனின் 10 ம் ஆண்டு நினைவை முன்னிட்டு நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளின் போது...

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-0463
Fax 718-822-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-156299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 436 81142, F 436 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224